மாற்றார் மதித்திடும்

மாநபி (ஸல்)



செ. திவான்

மாற்றார் மதித்திடும்

மாநபி (ஸல்)

வரலாற்றாசிரியர்

செ.திவான் M.A., M.Phil.,

சுஹைனா பதிப்பகம்

106-F, 4 A திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை 627 002.

© 572 665.

ஆசிரியரின் 42-வது நூல்

முதற்பதிப்பு : ஜுூன் 5, 2001 மீலாது தின வெளியீடு

உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூபாய் பத்து

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்

துஆ செய்ய வேண்டுகிறோம்

அன்வாருல் குர்ஆன் ஆசிரியர் மௌலவி ஹாபிஸ்

E.M. அப்துர் ரஹ்மான்

(நூரிய்யி, பாஜில் பாகவி, தென்காசி),

செங்கோட்டை, கல்வித்தந்தை மாவட்டக்கல்வி அலுவலர்
மர்ஹூம் மாமா ***ஏ.எஸ். சுலைமான்*** எம்.ஏ., பி.எட்.,

நெல்லை பேட்டை, மாவட்ட தி.மு.க. செயலாளர்
மர்ஹூம் மாமா ***மு. மகுத்தான்***,

தென்காசி நடுப்பேட்டை தெரு மாமா,
மர்ஹூம் ஹாஜி ***மு. அப்துல் காதர்,***

தென்காசி ஆசிரியர் மாமா,
மர்ஹூம் ***ஆ. சம்சுதீன்***

ஆகியோர் மறுஉலக நற்பேற்றிற்கும் நல்வாழ்விற்கும் இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சுஹைனா பதிப்பகம்.

அகிலத்தின் பார்வையில் அண்ணலார் (ஸல்)

அகிலங்கள் அனைத்துக்கும் அருட்கொடையாக வந்த அண்ணல் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஆவார்கள்.

சர்வ ஜீவ சிருஷ்டி கர்த்தாவாகிய இறைவன் அண்ட கோளங்களையும், அவற்றிலுள்ள சராசரங்களையும் படைக்க நாடிய போது தத்சொரூப மென்னும் மறைவான அவ்வியக்கத்தில் எதை முதற்குறிப்பாக்கி வெளியாக்கினானோ அந்த முதற்குறிப்பு ''ஹ(க்): கீகத் முஹமதிய்யா'' என்னும் நூரே (ஒளி)யாகும். அதனால் தான் ''முஹம்மதே! உம்மைப் படைக்காவிட்டால் வேறொன்றையும் நாம் படைத்திருக்க மாட்டோம்'' என்று அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கின்றான். இன்னமும் நமது ரசூலே கரீம் நாயகம் (ஸல்) அவர்களும், 'அல்லாஹுத்தஆலா படைத்த படைப்புக்களில் முதற்படைப்பு, என் ஒளியே' என்றார்கள். எனவே, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பொருட்டாலேயே எறும்பு கடை எண்பத்து நான்கு நூராயிரம் (84 கோடியே, பத்து லட்சத்தி ஆயிரம்) ஜீவசந்துக்களையும் இறைவன் சிருஷ்டித்தான்.★

அரபு நாட்டிலே தோன்றி அகிலத்திற்கு அறமுரைத்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறித்து வெளிநாட்டறிஞர்கள் முதல், நம் தாயகத்து அறிஞர்கள் வரை பலரும் எழுதியிருக்கிறார்கள்; எழுதவும் இருக்கிறார்கள்.

தக்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா

'நபியே நபிகள் திருநாயகமோ நம்மிறசூல்
சபியாஆதமுல்லாஹ் தலைமகனோ-புவியோர்கள்
பெற்றெடுத்த பாலகனோ பெரியவன் என்றானோ மறை?
கற்றுணர்ந்தோர் சொல்வீர்களித்து' என்று தென்காசி தந்த தத்துவமேதை தக்கலை மெஞ்ஞான சொரூபர் பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்கள் தமது ஞானமணிமாலை 186-வது பாடலில் குறிப்பிடுகிறார்கள்.

செவ்வல் எம்.ஏ, நெயினா முஹம்மதுப் பாவலர்

அந்தப் பாடலுக்கு 31-7-1914-இல் பாண்டிய மண்டலம் செவ்வல் மாநகரம் மஹாவித்துவான் எம்.ஏ., நெயினா முகம்மதுப்பாவலர் அவர்கள் எழுதிய தாற்பரிய உரை இதோ...

★ நாகூர் சி. ஹாஜி சிக்கந்தர், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கடைத்தேற்றும் வள்ளல், சிங்கப்பூர் 1934, பக் 1,2.

''முச்சுடரில் நடு நாயகமாய் உதித்து வந்த முகம்மதென்னும் நபிகள் பெருமானார் அவர்கள், வேதமிறங்கப் பெற்ற நுபுவத்தின் (நபித்துவம்) தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார்கள். இன்னும் நபிமார்கள், றசூல்மார்கள், யாவருக்கும் குருவாகவும் இருக்கிறார்கள். இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்னிலைமையான மகனாகவும் இருக்கிறார்கள். இன்னும் மனுஷ அவதாரங்கொண்டு பிறந்ததில் பூலோகத்திலுள்ள மானிட ஜென்மங்களில் உண்டான அப்துல்லா அவர்களுக்கும், உலக மாதாவாகிய ஆமீனா அம்மா அவர்களுக்கும் ஒரு ஏக புத்திர சிகாமணியாகவும் இருக்கின்றார்கள். உஜூதுடைய புறத்தால் அல்லாவுடைய 'சிர்றி'லிருந்து (ரகசியத்திலிருந்து) வெளியானவர்களாயும் இருக்கிறார்கள். இதில் எவ்விதம் அந்த ஒளியைத் திட்டப்படுத்துவீர்கள்! வேதங்களை ஆராய்ந்த சாஸ்திரிகளே, அறிஞர்களே சொல்லுங்கள்.★

ஹிஜ்ரத்

இறைவனின் இறுதித்தூதர் அண்ணலார் (ஸல்) மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் (குடிபெயர்ந்து செல்லுதல்) செய்தார்கள். மக்காவின் மக்களால் சரிவர மதிக்கப்படாத அண்ணலார் (ஸல்) மதீனாவில் பெருமதிப்பிற்குரிய சமயத்தலைவராய் வரவேற்கப்பட்டார்கள். அண்ணலார் (ஸல்) அங்கு வாழ்ந்த எட்டாண்டுகளில் இஸ்லாமிய மார்க்கமும் அரசாங்கமும் உருப்பெற்றன; அங்கு அண்ணலார் (ஸல்) சிறந்த அரசியல் அறிஞராய் காட்சியளித்தார்கள்; நாடு தழுவிய ஓர் அரசு அரேபியாவில் இல்லாததால், அண்ணலார் (ஸல்) அவர்களின் சமய அமைப்பு, அரசியல் அமைப்புமாயிற்று. மக்காவில் மெய்யுணர்வாளராய் இருந்த முஹம்மது (ஸல்) மதீனாவில் ஆட்சி வல்லுநராயும் சிறந்த படைத்தலைவராயும் விளங்கினார்கள்★★ அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம் விரிவானது.

அயல் நாட்டார் பார்வையில்

அண்ணலார் (ஸல்) அவர்கள் வாழ்க்கை குறித்து அயல்நாட்டவர்கள் அநேகம்பேர் எழுதியிருக்கிறார்கள்; பாரதத் திருநாட்டிலும் பெருமானார் (ஸல்) புகழ் பாடியவர்கள் பலர். பேராசிரியர் Snock Hurgronje (The Moslem

---

★ ஞான மணிமாலை, தாற்பரியவுரை, சென்னை, 1923 பக் 106.

★★ தி.வை. சொக்கப்பா, அரபு மக்களின் வரலாறு, சென்னை,1977, பக் 13.

world of To-day London 1926) மேஜர். ஏ.ஜி. லியோனார்டு (A.G.Leonard) (Islam: Her moral and spiritual value) E.E. KELLET (கெல்லத்) (A short History of Religions London 1933) ஸ்டான்லி லேன்-பூல், (Stanley lane-poole) இங்கிலாந்து வரலாற்று ஆசிரியர் தாமஸ்கார்லைல்★ (Thomas Carlyle) பிரெஞ்சு நாட்டு அதிபர் நெப்போலியன், பிரெஞ்சு ஆசிரியர் ஜார்ஜ், ரோத்ராண்,

சர் வில்லியம் மூயிர் (Sir William Muir, Life of Mohammad) எமெய்ல் டெர்மென்ஹாம், (Emile Dermenghem, Life of Mohammad London 1930) J.C.ஆர்ஷர் (Archer) Mystical Elements in Mohammad London, 1924) அடால்ப் ஹெல்பரிக், ரோம்லண்டா, ஹென்ரிப்ரேன் டிராப்பர், இந்தியக் குடியரசுத் தலைவர் ராதா கிருஷ்ணன், எம்.என்.ராய் (Historical Role of Islam) சர் தாமஸ் ஆர்னால்டு, சர்.பி.சி.ராய், (P.C.Roy) முன்ஷி பிரேம் சந்த் (Munshi Prem Chand) வில்லியமாக இருந்து மதம் மாறிய இலக்கிய நிபுணர் முஹம்மது மார்மடியுக் பிக்தால் (Marmaduke Pickthal) பெட்ரண்டுரஸ்ஸல் (Bertrand Russell) கோட்லிப் வில்லியம் வீய்ட்னர், ஏ.ஜே.ஆர்பரி, ஹங்கேரி தேஹாவெனெஸத்தே, விட்ராப்பர், ஆல்பிரட் மார்ட்டின், A.A. கெல்லட், பிரேம் சந்த் பாஷின் (Prem Chand Bhasin) பிரிஸ்டல் பல்கலைக்கழக விரிவுரையாளர் Delacy O' Leary, வேதிக்மாகசின் ஆசிரியர் பேராசிரியர் ராம் தேவ் (Ram Dev, Editor, Vedic Magazine) சர் சாத்துராம் (Sir Chhotu Ram) பிலிப் கே.ஹிட்டி, ஸ்டாண்வுட் காப்ஸ், Ralph Waldo Emerson Fredrick Ives Carpentar, அருட்திரு G. மார்கோலியத், ஜிவான்லால் கபூர் (Jiwan Lal-Kapur) ஹோமி J. ருஸ்தம்ஜி (Rustomji), பஞ்சாப் கிறிஸ்தவ தலைவர் திவான் பகதூர் S.P. சின்ஹா, சர் எட்வின் ஆர்னால்டு, சர் சார்லஸ் எட்வர்டு ஆர்சிபால் ஹாமில்டன், லாட்டன் (Lawton) ஹண்டர் (Hunter) (Our Indian Mussalmans) ஜான்சன் (Oriental Religions) கிளார்க் (CLARKE) (Three Great Religions) வன்கிராமர் (Von Krammer) போஸ்வொர்த் ஸ்மித் (Bosworth Smith) ஆர்தர் சில்மென், ஹெச் பாலம், வான் பேலன்பர்க், ராட்வெல் (Rodwell) J.W.H. ஸ்டாபர்ட் (Stobart) மேஜர் ஆர்தர் கிளைன் லியோனார்டு (Arthur Glyn Leonard) திருமல் ரா ராபோல் (Tirumal Rao Rapole) டாக்டர் ஹர்தயாள் (Har dayal) சாமுவேல் ஜான்சன், மஹாத்மா காந்தி, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு, ★★ அருட்திரு லேஸிலு வியரி, திருமதி வாரா வக்ஸியா வக்ளியரீ (நேப்பிள்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர்),

★ ஏம்பல் தஜம்முல் முகம்மது பதிப்பித்த தூது வந்த வீரர் நூலில் (1994) தாமஸ் கார்லைல் கி.பி. 1840-இல் அண்ணல் (ஸல்) அவர்கள் பற்றி ஆற்றிய சொற்பொழிவு முழுவதனையும் காணலாம்.

★★ Mohammed Amin, Wisdom of Prophet Muhammad, Lahore,1946, P.P.68-112.

உலகப்பேரறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷா, டாக்டர் அம்பேத்கார், ருஷ்யப் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய், ஹோம் ரூல் இயக்கம் நடத்திய அன்னிபெசண்ட் அம்மையார், சீக்கிய நிறுவனர் குருநானக், கவிக்குயில் சரோஜினி தேவி, லாலா லஜபதிராய், ஜான் டோவன் போர்ட், அருட்திரு ஸ்டீபன்ஸ், நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் ரவீந்திரநாத்தாகூர், அல்பான்ஸோ-தெ-லமர்தீன், சர் வில்லியம்மூர், டாக்டர் காலித் ஷெல்ட் ரேக், வரலாற்று ஆசிரியர் கிப்பன், அமெரிக்க வரலாற்று ஆசிரியர் வாஷிங்டன் இர்விஸ், கானன் ஐஸக் ட்டெய்லர், டாக்டர் லீட்னர், டாக்டர் ஹியூகோ மார்க்கஸ், டாக்டர் மொரிஸ், ஜான். எஸ். ஹோய்லாந்து, ஜி.எம்.ராட்வெல், டாக்டர் லட்பீஸ், தத்துவ அறிஞர் ட்டீ, எல்,லாஸ்வானி,★ டில்லி லாலா அமர்சந்த், மேஜர் ஜெனரல் பர்லாங், லியோ டோராஷ், டாக்டர் ஜுலியஸ் (ஹங்கேரி) பேராசிரியர் A. மோனே (பிரான்ஸ்),

ஜொஹ்ராஸ்ட்ர மதகுரு டாகூர் தாலா, ரிச்சர்டு போக்காக், ட்டீ, டபிள்யூ, ஆர்னால்டு,★★ பிரெஞ்சுக் கவிஞர் லாமார்ட்டின் டி.ஜி.ஹோகார்த், ராபர்ட் பிரிஸ்ப்பால்டு, பேராசிரியர் டி ரேப்பர், ஹான்ஸ் கோகன், டாக்டர் ஜுலியஸ் ஜெர்மான்ஸ், ஏ.சீ. பொக்கோ, வாஷிங்டன் இர்வின், ஜெர்மானிய கவிஞர் கதே, டாக்டர் ஷ்ப்ரெங்கர், சர்தேவ் பிரகாஷ், பூமிதான இயக்கத்தலைவர் வினோபாஜி, சுவாமி விவேகானந்தர், பண்டித கோபால கிருஷ்ணன், மைசூர் கே.எஸ்.இராமகிருஷ்ணராவ்,

பேராசிரியர் லெபான், வரலாற்று ஆசிரியர் பேக், ஜெர்மன் பன்னூலாசிரியர் பான்கிரேமர், வில்லியம் லூயி, செயின்ட் டெயிலர், பேராசிரியர் மோஸோலியன் ராஸ், சீர்திருத்தச் செம்மல் ராஜாராம் மோகன்ராய், ஜெ.டேவன்போர்ட், எம்மானுவேல் டூஸ், ரூஸோ, போன்ற உலகத் தலைவர்கள் (தமிழகம் நீங்கலாக) அண்ணலார் (ஸல்) குறித்து அவ்வப்போது தங்களது புகழுரைகளைத் தந்துள்ளார்கள். அதனை நாம் சில ஆங்கில நூல்களிலும், தமிழ்மொழி பெயர்ப்பு நூலிலும் பார்த்து படித்து மகிழ்ந்துள்ளோம்.

மைக்கேல் ஹெச்-ஹார்ட்

அறிஞர் மைக்கேல் ஹெச். ஹார்ட் (Michael H.Hart) புதிய வரலாறு

★ அடியார், இஸ்லாம் பற்றி உலகத்தலைவர்கள், 1985 -சென்னை.

★★ தாருல் இஸ்லாம் ஆசிரியர் பா. தாவூத்ஷா 1932-இல் வெளியிட்ட அஹ்மத் நபியும் (ஸல்) அயல் மதவாதிகளும் என்ற நூலில் இவர்கள் அண்ணல் (ஸல்) குறித்து கூறியுள்ள விவரங்களை முழுமையாகக் காணலாம்.

படைத்தோரின் வரிசைமுறையில் 100 பேர் எனும் நூலினை 1978-ஆம் ஆண்டு வெளியிட்டார். (The 100- A Ranking of the Most Influential Persons in History) அந்த நூலில் நூறுபேர்களை வரிசையாகத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களையும் கருத்துக்களையும் தந்துள்ளார். அத்தோடு அந்த நூலின் பிற்பகுதியிலும் காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன் உட்பட பத்து பேர்களை குறிப்பிட்டு செல்வாக்குமிக்க நூறுபேரில் சேராத ஆனால் சேர்க்கத்தக்க தகுதியுடையோர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்த நூலில் முதன் முதலாக டாக்டர் மைக்கேல் ஹெச். ஹார்ட் அவர்களால் குறிப்பிடப்படுபவர் யார் தெரியுமா? அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள்தான்! அவர் அந்த நூலின் துவக்கத்தில் கூறியுள்ள வாசகங்கள் இதோ......

Muhammad

"My choice of Muhammad to lead the list of the world's most influential persons may surprise some readers and may be questioned by others, but he was the only man in history who was supremely successful on both the religious and secular levels.

Of humble Origins, Muhammad founded and promulgated one of the world's great religions, and became an immensely effective political leader. Today, thirteen centuries after his death, his influences is still powerful and pervasive★ இதன் தமிழாக்கம் இதோ...

முஹம்மத் (ஸல்)

''இந்த உலகத்தில் அளப்பரிய செல்வாக்குடன் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியவர்களின் பட்டியலில் முஹம்மது அவர்களை முதலாமானவராக நான் தேர்ந்தெடுத்தது வாசகர்களில் சிலருக்கு வியப்பாக இருக்கும்; மற்றும் சிலர் ''ஏன் அப்படி?'' என்று வினாவும் தொடுக்கலாம்; ஆனால் சமயம், உலகியல் ஆகிய இருநிலைகளிலும் ஒருசேர மகத்தான வெற்றி பெற்றவர், வரலாற்றில் அவர் (அண்ணல் முஹம்மது (ஸல்) ஒருவரேதாம்.

எளிமையான வாழ்க்கைப்படியில் துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் மதங்களில் ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த

★ *Michael H. Hart, The 100, Newyork, 1978, P.33*

அரசியல் தலைவருமாவார்கள். அவர்கள் (அண்ணலார் (ஸல்) உயிர் நீத்து பதின்மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும் எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகிறது''★

அகிலமெங்கிலும் மத, இன, மொழி வேறுபாடின்றி அண்ணலார் (ஸல்) குறித்த புகழுரைகள் அனுதினமும் வந்து கொண்டே இருக்கின்றன.

தமிழர் நெஞ்சங்களில் தாஹாநபி (ஸல்)

தாய்த்திருநாடாம் தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் நெஞ்சங்களில் அண்ணலார் (ஸல்) அவர்கள் குறித்த கருத்துக்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் தான் என்ன? என்று சிந்தையைச் செலுத்தத் துவங்கியபோது தென்பட்ட சில விவரங்கள் இதோ.....

தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற, இஸ்லாமிய மார்க்கத்தினை ஏற்றுக் கொண்ட அறிஞர் பெருமக்கள் அண்ணலார் (ஸல்) குறித்து தங்களது கருத்தினை அவ்வப்போது சிறியதும், பெரியதுமான நூல்களாக்கித் தந்துள்ளனர். தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றனர்! அது குறித்த செய்திகள் விரிவானது.

மாற்றார் மதித்திடும் மாநபி

இஸ்லாம் மார்க்கத்தினை ஏற்றுக் கொள்ளாத அயல் மதத்தினர், தமிழ்நாட்டில், அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குறித்துச் சொல்லியுள்ளது பற்றிய விஷயங்களுக்கு வருகிறோம்.

வித்துவான் சி. முத்துக்கிருட்டின நாட்டார்

ஐயம் பேட்டை கழக உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் சி. முத்துக்கிருட்டின நாட்டார் 1955-இல் உலகப் பெருமக்கள் நால்வர் என்ற சிறுநூலை வெளியிட்டார். அதில் நபிகள் நாயகம் (ஸல்) குறித்து 18 பக்கங்கள் எழுதியுள்ளார்கள். அதில் ஒரு சில வரிகள் இதோ....

'மனித ஆற்றலால் அடையக்கூடாத உயர்ந்த பதவியை நபிகள் நாயகம் பெற்றிருந்தாலும் அவர் தம்மை எஞ்ஞான்றும் ஏனையவர்களைக் காட்டிலும்

★ நூறு பேர், மைக்கேல் ஹெச். ஹார்ட், மொழிபெயர்ப்பாளர்கள் இரா.நடராசன், மோ. வள்ளுவன் கிளாரன்ஸ் மோத்தா, மௌலவி எம்.அப்துல் வஹ்ஹாப், பதிப்பாசிரியர், மணவை முஸ்தபா, சென்னை, 1993, பக். 33

மேலானவராகக் கருதினாரல்லர். மனிதனுடைய மேன்மையும் தாழ்மையும் அவன் செய்யும் தொழில்களால் உண்டாவதில்லை. அவனுடைய வாய்மையாலும், ஒழுக்கத்தாலுமே உண்டாகுகின்றன என்பது நபிகள் எண்ணம்'.

மேதை ப. ராமஸ்வாமி

சிறந்த தமிழறிஞரும், மொழிபெயர்ப்பாளருமான ப.ரா. தமிழகம் அறிந்த பிராமண அறிஞர்; திருநெல்வேலி நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர். அவர் 1956-இல் 'புத்த ஞாயிறு' என்னும் 208 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். அதில் 'முகம்மது நபி' எனும் தலைப்பில் 19 பக்கங்கள் எழுதியுள்ளார். அதில் சில வரிகள்.....

'உலகில் அவதரித்த பல பெரியவர்களில் நபி பெருமானின் சரித்திரம் மிக விரிவானது; நம்பத்தகுந்தது; சந்தேகத்திற்கு இடமில்லாததென்று பலராலும் அங்கீகரிக்கப்பட்டது.... நபியின் (ஸல்) பிரசாரம் ஆடம்பரமற்ற அடக்கமான முறையில் அமைந்திருந்தது. கூட்டங்களிலே விவாதம், தத்துவச் சண்டைகள் முதலியவற்றை அவர் ஒரு போதும் விரும்பவில்லை. அவர் ஊர் ஊராகச் சென்று தம் செய்திகளை மக்களுக்கு அறிவித்து வந்தார். அவருடைய தோற்றமும், எளிய வாழ்க்கையும், நற்குணங்களும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன....

அ.லெ. நடராஜன்

சென்னை பாரதி நகரைச் சேர்ந்த தமிழறிஞர் அ.லெ. நடராஜன் 1966-இல் நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு எனும் 376 பக்கங்களைக் கொண்ட நூலை கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் முகவுரையோடு வெளியிட்டார். அதில் சில வரிகள்.....

'எளிமை, நாவன்மை, நேர்மை, எச்சரிக்கையுடன் இருத்தல், பெருந்தன்மை, தன்னலமின்மை, பிறருக்கு உதவும் பண்பு, உறுதி, ஊக்கம், சோர்வின்மை, நம்பிக்கை, நட்பு, நன்றி மறவாமை, ஆண்டவனுடைய ஆற்றலிலும் கருணையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை இந்தப் பண்புகள் அனைத்தும் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்றும் குறைவில்லாமல் இருந்திருக்கின்றன.'

வித்துவான் S. நாராயணன்

1967-இல் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் வெள்ளலூரைச் சேர்ந்த

அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பண்டித வித்துவான் S.நாராயணன் 'வழிகாட்டிகள்' எனும் 120 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். அதில் 38 பக்கங்களில் முகமது நபி (ஸல்) அவர்கள் வரலாற்றை எழுதியுள்ளார். அதில் சில வரிகள்.....

'முஹம்மது என்ற அரபுமொழிக்குப் புகழப்பட்டவர் என்பது பொருள். அப்பெயரைக் கேட்ட அங்குள்ளோர் யாவரும் குழந்தையை நோக்கி இக்குழந்தைக்கு இப்பெயரிட்டது தகுதியானதே' என்று கூறிச் சென்றனர். பழிக்குப்பழி வாங்கிப்பிற உயிர்களை போக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் கூடாது. எல்லாரையும் உடன் பிறந்தவராகக் கருதவேண்டும்.

ஒற்றுமை, சொன்ன சொல் தவறாமை, வீண் செலவு செய்யாமை, முதலிய நற்குணங்களைக் கைக்கொள்ள வேண்டும்; ஒவ்வொருவருடைய உரிமையையும் பாதுகாக்க முற்பட வேண்டும்; நேர்மையுடன் வாழ முயல வேண்டும் என்பன போன்ற அறவுரைகளை அகிலத்திற்கு உரைத்தவர் அண்ணலார் (ஸல்).'

S. சித்துலிங்கம்

உயர்நிலைப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய S.சித்துலிங்கம் அவர்கள் 1971-இல் 74 பக்கங்களில் எழுதிய நூல் நபிகள் நாயகம். அதில் சிலவரிகள்....

''திருநபியவர்கள் சிறந்ததொரு மார்க்கமான இஸ்லாத்தை நிறுவியவர் மட்டுமின்றி அரபு நாட்டின் மன்னரும் ஆவார்; இணையற்ற தேவதூதராகவும் சிறந்த மன்னராகவும் விளங்கினார். நாட்டின் செல்வத்துக்கு அதிபதியாக இருந்தும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். கடின உழைப்பை விரும்பினார். அடக்கமாக வாழ்ந்தார். மேலும் ஏழ்மையே எனது பெருமை என்று கூறுவார்..''

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

கலை மாமணி, தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் தமிழகத்தில் மீலாது விழாக்களில் நபிகள் நாயகம் (ஸல்) புகழ் பாடியவர். அவர் கும்பகோணத்தில் ஆற்றிய உரையினை 1974-இல் நபிகள் நாயகம் எனும் 56 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளியிட்டார். அதில் சில வரிகள்....

தீர்க்கதரிசி

'தீர்க்கதரிசி என்றால் பின்னால் வருவதை முன்னால் அறிபவர் என்றாகும்.

நபி என்றால் இறைவனுடைய திருத்தூதர் என்றாகும். எத்தனையோ தீர்க்கதரிசிகள் நபிமார்கள் உலகத்தில் தோன்றினார்கள் என்று எல்லாச் சமயத்தினரும் கூறுகிறார்கள். ஆனால் தீர்க்கதரிசி என்ற சொல்லுக்கு உரியவர்கள் நம்முடைய நபிகள் நாயகம் ஒருவர்தான் . இது என்னுடைய முடிவு. ஞானி ஒருவன் பின்னாலே வரப்போகின்ற செய்திகளை முன்னாலே அறியும் ஆற்றல் படைத்தவன். அந்தப் பேராற்றல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுதும் இருந்தது......

தந்தை பெரியார்

திராவிட இயக்கத்தின் தலைவர்கள் பலரும் தமிழகத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தின விழாக்களில், (மீலாது விழா) கலந்து சொற்பொழிவாற்றியுள்ளனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு இப்படி திராவிட இயக்கத்தலைவர்கள் தமிழகத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புகழ் பாடியுள்ளனர். விரிவான அந்த வரலாற்றில் சில செய்திகள் மட்டும் இங்கே.....

''இஸ்லாம் மார்க்கத்தையும், அண்ணல் நபி (ஸல்) அவர்களையும் பற்றி உலகில் எத்தனையோ ஏற்றமிகு தலைவர்கள் ஏற்றிப்போற்றிப் பேசியிருந்தாலும் தமிழகத்தில் திராவிடத்தலைவர்கள் போல் பாசநேச உணர்வோடும் பேசியோர் இல்லை எனலாம். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியார் சீலையம்பட்டியில் 69 பேர் முஸ்லிமாக மதம் மாறியபோது தந்தை பெரியார் பேசிய பேச்சில் சில வரிகள்.(20.12.1970 விடுதலை நாளிதழ்)

''அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை முஸ்லிம்கள் வணங்க மாட்டார்கள். ஆண்டவனின் அருட்கொடையான நபிகள் நாயகம் அவர்களைக் கூட முஸ்லிம்கள் வணங்குவதில்லை. நபிகள் நாயகத்தை முஸ்லிம்கள் மிகவும் போற்றிக் கண்ணியப்படுத்துவதன் மூலம் மனிதனை மனிதர் வணங்கக்கூடாது என்ற உண்மையை உலகுக்குச் சுட்டிக்காட்டி உணர்த்தியுள்ளார்கள்.''

அறிஞர் அண்ணா

உலகத்தில் தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் நினைத்து போற்றப்படும் தலைவர் அறிஞர் அண்ணா.

1957 அக்டோபர் 7-இல் சென்னைக் கடற்கரையில் மீலாது விழாவில், 1966 மார்ச் 21 அபிவிருத்தீஸ்வரம் பள்ளிவாசல் வரவேற்பில், ராயபுரம், காஞ்சிபுரம் மீலாத் விழாக்களில், இப்படி எண்ணற்ற மீலாது விழாக்களில் பங்கேற்று அறிஞர் அண்ணா ஆற்றிய உரைகளில் சில வரிகள் இதோ....

‘தவறான குருட்டு நம்பிக்கையிலே சிக்கிக் கிடந்தவர்களை விடுவித்துக் காப்பாற்றி, இருட்டுக் காலத்தில் நல்ல ஒளியைத் தந்தார் முகமது நபி. நபிகள் நாயகம் அவர்களுடைய வரலாறு வீரத்துக்கு ஒரு ஊற்று; சமுதாயத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு....★

1946-இல் அறிஞர் அண்ணா எழுதியது சந்திரமோகன் (சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்) எனும் நாடகம். அதன் தற்போதைய பதிப்புக்களில் கீழ்க்காணும் வரிகள் காணப்படவில்லை என்பதால் அண்ணல் (ஸல்) குறித்து அறிஞர் அண்ணா எழுதியுள்ள வாசகங்களை அவரது கையெழுத்திலேயே தருகிறோம்..



‘‘ஆமாம்! ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலே அரேபியா நாட்டிலே, மணற்காட்டிலே, மெஞ்ஞான போதகர் வீசிய மூன்று மாணிக்கங்களை நான் பெற்றேன்! மாணிக்கங்களா! ஆமாம்! மாணிக்கங்கள் தான். ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! அல்லாஹு அக்பர்!’’....

‘பஞ்சமன் அடிபட்டான் நமக்கென்ன என்றுதான் எல்லோரும் இருந்துவிட்டனர். இப்போது, பச்சே, என் கண்ணிலே நீர்பெருகினால், இங்கே, ஒரு சொட்டு ரத்தம் கீழே சிந்தினால், இஸ்லாமாக உள்ள அத்தனை கோடிமக்களும் தங்கள் உடலிலே இரத்தம் கொட்டுவதாகக் கருதுவார்கள்! அவ்வளவு சகோதரத்துவம்! அவ்வளவு அன்பு! அப்துல்லா! நான் பாட்சாவாகி விடுகிறேன். பஹுத் அச்சா! வா! இந்தச் சேற்றிலே புரளத் தேவையில்லை. அங்கே சந்தனம் கமகமவென்று இருக்கிறது.★★

★ ஜே.எம். சாலி, தொகுப்பாசிரியர், அண்ணல் நபி பற்று அறிஞர் அண்ணா இரவாஞ்சேரி, 1980.

★★ இரா. சனார்த்தனம், அறிஞர் அண்ணா நாடகங்கள் ஓர் ஆராய்ச்சி, சென்னை 1974 பின்னிணைப்பில்

கலைஞர் மு. கருணாநிதி

திராவிட இயக்கத்தின் ஆரம்ப காலந்தொட்டு, அண்மைக்காலம் வரை மீலாத் விழாக்களிலும், சீறாப்புராண உரைகளிலும் அண்ணலார் (ஸல்) குறித்து கலைஞர் மு. கருணாநிதி ஆற்றிய உரைகள் ஏராளம்; ★ அதில் ஒரு பகுதி.

''நபிகள் நாயகம் மற்றவர்களைத் திருத்துவதற்கு முன்பு தன்னைத் திருத்திக் கொண்டார் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் உண்டு; இன்று நாட்டிலே பார்க்கிறோம் பலபேரை. தங்களைத் திருத்திக் கொள்ள வக்கற்றவர்கள், வகையற்றவர்கள்; மற்றவர்களைக் குற்றம் சொல்லுவதும், மற்றவர்களைத் திருத்திக்கொள்-திருத்திக்கொள் என்பதும் இன்றைக்கு வழக்கமாக ஆகிவிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறை எந்த அளவுக்குச் செம்மையாக அமைந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.''

சி.பி. சிற்றரசு

சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி; பன்னூலாசிரியர். அவர் 1979-இல் உலகைத் திருத்திய உத்தமர்கள் என்னும் 216 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். அதில் 'முகமது நபிகள்' குறித்து 14 பக்கங்கள் எழுதியுள்ளார். அதில் சில வரிகள் இதோ.....

'ஏகி குதா-ஏகிபந்தா', 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்ற கொள்கை, போரில் அடிபட்டு கால்கள் கைகளில் இரத்தஞ்சிந்தி, ஆண்டவன் ஒருவனே என்ற கொள்கையை நிலைநாட்டி, இன்று சுமார் பத்து கோடி பேர்கள் பின்பற்றக்கூடிய அளவுக்கு அரும்பாடுபட்டவர் நபிகள் பிரான் அவர்கள்...'

தமிழர் தலைவர் வைகோ

மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர் தமிழர் தலைவர் வைகோ எம்.பி., அவர்கள் பல்வேறு மீலாது விழாக்களில் பங்கேற்று அண்ணலார் (ஸல்) புகழ் பாடியுள்ளார். 'தியாக வேள்வியில்' என்ற 64 பக்கங்களைக் கொண்ட நூலை 1994-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அதில் சில வரிகள்.....

''அண்ணலார் (ஸல்) வாழ்வில் எத்தனை போர்க்களங்கள்? எண்ணிக்கை பெரிதல்ல. மனதிலே உறுதி வேண்டும். உறுதி இருப்பவர்களை எவராலும் சாய்க்க முடியாது. வானம் துலங்கினும் மீனம் படினும் அலைகள் பொங்கினும்,

---

★ *அடியார், இஸ்லாம் பற்றி திராவிடத் தலைவர்கள், சென்னை 1992.*

மலைகள் வீழினும் தன்னிலை மாறாத தன்மையாளனை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது. இந்தக் கிரகங்களை உள்ளடக்கியிருக்கின்ற அண்ட பகிரண்டமே சிதறி நொறுங்கினாலும் சரி, கடலே பிரளயமாகப் பொங்கியெழுந்தாலும் சரி, எரிமலை வெடித்தாலும் சரி, உள்ளத்திலே உறுதி உள்ளவனை யாரும் அசைக்க முடியாது. மரண பயங்கரமே சுற்றி வளைத்தாலும் எஃகு இதயத்தோடு அவன் முன்னேறிக் கொண்டிருப்பான். அவன் தான் இலட்சியவாதி. இலட்சியவாதிகளுக்கெல்லாம் என்றைக்கும் வழிகாட்டக்கூடிய நிலையிலே பெருமானார் (ஸல்) வாழ்க்கை இருக்கும்...''

அடியார்

இலக்கியத் தென்றல் கலைமாமணி அடியார் 'இஸ்லாம் பக்கம் வாருங்கள்; 'இஸ்லாம் என் காதல்' 'இஸ்லாம்' போன்ற பல நூற்களை வெளியிட்டவர். அவர் அண்ணலார் (ஸல்) பற்றி கூறிய சில வரிகள்...

''பல பெரியோர்கள் தொடக்க வாழ்வில்-இளமை வாழ்வில் நெறிகெட்டு-தறிகெட்டு வாழ்ந்ததாக வரலாறுகள் கூறும்; நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தது முதல் மனித குலத்தில் அழகிய முன் மாதிரியாய் இருந்தார்கள். அறிவறிந்த நாள் முதல் ஒரு குறை-ஒரு ஒச்சம் கூட இல்லாத பெருவாழ்வு அண்ணலார் ஒருவருக்கே உண்டு!''

கா. காளிமுத்து

தமிழகத்தின் சபாநாயகராக இருந்து வரும் முத்தமிழ் வித்தகர் கா. காளிமுத்து. 1984-ஆம் ஆண்டு 'நபிகள் நாயகம் நற்பண்புகளின் தாயகம்' எனும் 32 பக்கங்களைக் கொண்ட நூல் வெளியிட்டார். அதிலிருந்து சில வரிகள்....

"நபிகள் நாயகம் மிகப்பெரிய ராஜதந்திரியாக இருந்தார். தீர்க்கதரிசியாக இருந்தார்; நீதிபதியாக இருந்தார். ஆட்சித்தலைவராக இருந்தார். அவருடைய வாழ்க்கை குரானில் இருக்கிற கருத்துக்களின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை. நல்லொழுக்கத்திற்கு, நல்ல குணத்திற்கு, நல்ல பண்பாட்டிற்கு நாயகத்தினுடைய வாழ்க்கைதான் எடுத்துக்காட்டு... எல்லாத் துறைகளுக்கும் உரிய கருத்துக்களை அண்ணலார் (ஸல்) வழங்கி இருக்கிறார்.''

தமிழன்பன்

என்னைக் கவர்ந்த பெருமானார் (ஸல்) எனும் 20 பக்கங்களைக் கொண்ட நூலினை 1990-இல் தமிழன்பன் வெளியிட்டார். அதில் சில வரிகள்...

'நபிகள் நாயகம் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே தவிர, பெரிய மெய்ஞ்ஞானக் களஞ்சியமாக இருந்தவர்கள். நபிகள் நாயகம் மெய்யறிவினால் நிரம்பி இருந்தார்கள்..'

வலம்புரி ஜான்

இஸ்லாம் மண்ணுக்கேற்ற மார்க்கம் என்று நூல் எழுதுவதோடு, 'நாயகம் எங்கள் தாயகம்' எனும் கவிதை நூலை 1995-இல் 285 பக்கங்களில் வெளியிட்டவர் கவிஞானி வலம்புரிஜான். அதில் சில வரிகள்....

'காலங்கள் கடந்தாலும் கருதி நாம் போற்றுவதற்குக் கட்டுரையாக (உண்மை) அவர் (அண்ணலார் (ஸல்) இருக்கிறார். நாயகன் வடித்த நயனச் சிற்பி நபிகள் நாதர் வாழ்கவே!'

தமிழகத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறித்து வரலாற்றுச் செய்திகளை நூலாக வெளியிட்டவர்களின் செய்தியினைப் பார்த்தோம்.

தமிழகம் இன்றும் என்றும் போற்றிடும் தமிழறிஞர்கள் சிலர் அண்ணலார் (ஸல்) குறித்து சொல்லியுள்ள சில செய்திகள் இதோ....

மகாகவி பாரதியார்

கவிதைகள் மட்டுமின்றி, கதைகள், கட்டுரைகள் பல எழுதியவர் மகாகவி பாரதி. அவரது கட்டுரைகள் தத்துவம், மாதர், கலைகள், சமூகம் எனும் தலைப்பில் பிரசுரமாகியுள்ளது.

தத்துவம் எனும் தலைப்பில் 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' எனும் கட்டுரையினைத் தந்துள்ளார்கள். 20.6.1920 ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருநெல்வேலி மாவட்டம் பொட்டல்புதூரில் தெற்குப் புதுமனைத் தெருவில், இஸ்லாமியர்கள் கூடியிருக்கும் சபையில் மகாகவி பாரதி ஆற்றிய உரையே அது. அதில் அண்ணலார் குறித்து பாரதி சொல்கிறார்....

''நபிக்கு (ஸல்) புஸ்தகப்படிப்பு இல்லை; கேள்வியால் மஹா பண்டிதரானார்; ஸஹவாஸத்தால் உயர்ந்த ஞானியானார். நிகரில்லாத பக்தியால் அரசனும் கலீபும் தீர்க்கதரிசியுமானார். முஹம்மதுநபி மஹா ஸுந்தரபுருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா பக்தர், மஹா லௌகிக தந்திரி, வியாபாரமானாலும், யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால் அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.★

திரு.வி.க.

தமிழறிந்தார் யாவரும் அறிந்த தமிழறிஞர் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் (1883-1953) அவர்கள் இஸ்லாம் மார்க்கம் குறித்தும், அண்ணல்

★ சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள், கட்டுரைகள், சென்னை, 1947, பக். 92-93

முஹம்மது நபி (ஸல்) குறித்தும் பலதடவை எழுதியும், உரையாற்றியும் உள்ளார். அண்ணலார் (ஸல்) குறித்து அவர்கள் எழுதிய பாடல்.

"அரபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த முஹம்மது நபியே போற்றி!
தரையினில் பொதுமை மங்கச் சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி! போற்றி!"

நபிகள் நாயகம் உலகை உய்விக்க வந்தவர். அவர் ஒரு நாட்டார்க்காதல், ஒரு கூட்டார்க்காதல் உரியவரல்லர். ஆகவே அவர் திருநாளை உலகம் கொண்டாடுவதாக! கொண்டாடிச் சகோதர நேயத்தை நிலைபெறுத்துவதாக!★

சுத்தானந்த பாரதியார்

சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து நாற்பதாண்டுகளுக்கு மேலாகக் கவிதைகளும், இசைப்பாடல்களும் ஓயாமல் எழுதிய கவியோகி சுத்தானந்த பாரதியார் சிறந்த தமிழறிஞர்; பன்னூலாசிரியர்; அவர் பெரியார் வரலாறு எனும் நூலை 110 பக்கங்களில் வெளியிட்டார். (நூல் வெளியான ஆண்டு கிடைக்கவில்லை). அந்த நூலில் பக்கம் 72 முதல் 80 வரையில் முகம்மது நபி எனும் கட்டுரையினை எழுதியுள்ளார். அதில் சில வரிகள்.

'கடவுளுறுதியின் வெற்றி விளக்கான மாசற்ற முகம்மது நபி மணி ஹிஜாஸில், குரைஷியார் வகுப்பிற் பிறந்தார். முகம்மதின் உள்ளம் இயல்பாகவே ஆண்டவன் அன்பிற் பதிந்திருந்தது. சுற்றிலும் விரிந்தவான், செங்கதிர் பரந்த வெளி, நிவந்த மலைகளில் ஆண்டவன் அருட்பெருமையைக் கண்டு உருகி நிற்பான்(ர்)'

கட்டழகும், கருணையுள்ளமும், உண்மையுரையும், மாசறு நடையும், வினைத்திறனும், கடவுள் அன்பும் கொண்ட முஹம்மது, தலைக்குட நங்கைபோலும், தண்ணுளே ஆமைபோலும், கழைக்குடலக் கூத்தன் போலும் உலக வாழ்விலிருந்து மனத்தை ஆண்டவன் திருவடியிலேயே வைத்திருப்பான்(ர்). நீரிற் படகு போல ஒட்டாது உலகில் வாழ்ந்தான்(ர்)....

கா. அப்பாத்துரை

பன்னூலாசிரியர், பன்மொழிப்புலவர் புலவர் கா. அப்பாத் துரையார். 'உலகளாவிய புகழ் பெற்றவருள் முன்னணி முதலிடம் நபிகள் நாயகம் என்பதில் ஐயமில்லை. உண்மையில் அவரளவு உலகையே மாற்றியமைத்த

★ ரங்கூன் கலைமான், அறிஞர் உலகம் போற்றும் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) சென்னை, 1990, பக் 12.

இன்னொருவரை கூற முடியாது' என்று அண்ணலார் (ஸல்) குறித்து உரைத்துள்ளார்.

இரா. நெடுஞ்செழியன்

'திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடியான நாவலர் இரா.நெடுஞ்செழியன் அண்ணலார் (ஸல்) குறித்து சொன்ன சில வரிகள்...

'அறியாமை இருளில் அமிழ்ந்து கிடந்த மக்களுக்கு அறிவொளியூட்டி, அவர்களைத் தேற்றிக் காட்டுமிராண்டிகளாக இருந்த மக்கட் கூட்டத்தை நாகரிகச் செப்பமுடையவர்களாக ஆக்கி, விலங்கு உணர்ச்சியோடு உழன்று கிடந்த மக்களை பண்பாடுடையவர்களாகச் செய்து மனிதப் பண்பற்ற வெறியுணர்ச்சியோடு உலாவிக் கொண்டிருந்த மக்களை, அன்புடையவர்களாக, அருளுடையவர்களாக, மாண்புடையவர்களாக, மதிப்புடையவர்களாக ஆக்கி செயற்கரிய பலவற்றைச் செய்து காட்டியவர் நபிகள் நாயகம்.'

அகிலன்

· தமிழகத்தில் 'ஞானபீட' விருது பெற்ற பிரபல எழுத்தாளர் அகிலன். அண்ணலார் (ஸல்) குறித்து அவர்கள் கூறிய வாசகங்கள்....

'எளியோர்க்கு இரங்கும் பண்பு, பொறையுடைமை, கூடி வாழும் இயல்பு, இறைவனிடம் ஈடுபாடு முதலிய உயர் பண்புகள் உலகில் பரவ காரணகர்த்தாவாக விளங்குபவர் உத்தமர் நபிகள் நாயகம். சாதி சமயம் இனம் மொழி என்ற பாகுபாடுகளைக் கடந்த அனைவராலும் போற்றப்பட வேண்டியவர் நபிகள் பெருமானார்.'

ம.பொ.சிவஞானம்

சிலம்புச் செல்வர், விடுதலைப் போராட்ட வீரர் பன்னூலாசிரியர் ம.பொ.சிவஞானம். அண்ணலார் (ஸல்) குறித்து அவர் கூறியுள்ள சில வரிகள்...

'தமிழ் மக்கள்-அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும்- தீர்க்கதரிசியான நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளை படித்து இன்புற வேண்டும்..'

தனிநூல் வெளியிட்டவர்கள்

தாஹா நபி (ஸல்) குறித்து தமிழகத்தில் தனிநூல் வெளியிட்டவர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் சென்னை.ஸி.ஆர்.ஸ்ரீநிவாஸ அய்யங்கார். இவர் 1926-ல் 'மஹமத் நபி' எனும் 56 சிறிய பக்கங்களைக்

கொண்ட நூலை 5 அணா விலையில் வெளியிட்டுள்ளார்கள். சுதேசமித்திரன் லிமிடெட் வெளியிட்ட அந்த நூல் மூன்றாவது பதிப்பாகும். எனவே அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே முதல் பதிப்பு வெளியாகியிருக்கும் என்று உறுதியாக நாம் நம்பிடலாம். 1942-இல் முன்னீர் பள்ளம் தமிழறிஞர் S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் 'நபி நாயகம் கவிவாணர்களும்' என்ற நூலை 12 அணா விலையில் வெளியிட்டுள்ளார். அதில் நபிநாயக வரலாறு குறித்து 21 பக்கங்களில் எழுதியுள்ளார்கள். அந்த இரண்டு நூல்களும் காலகதியில் மறைந்து விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் அதனை மறுபதிப்புச் செய்துள்ளேன். 75 ஆண்டுகளுக்கு முன், 60 ஆண்டுகளுக்குமுன் இருபெரும் அறிஞர்கள், அண்ணலார் (ஸல்) குறித்து எழுதியுள்ள செய்திகள் இதோ....

மஹமத் நபி

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ.,

இயற்றியது.

(மூன்றாம் பதிப்பு)

சுதேசமித்திரன் லிமிடெட்,

சென்னை.

Copy Right] 1926 [Price As. 5.

Islam Founder and Islamic Poets.

நபிநாயகமும் கவிவாணர்களும்

By

M. S. PURNALINGAM PILLAI, B. A., L. T.,

Emeritus Professor in English,

Bishop Heber College, Trichinopoly.

"Islam is the natural religion of man, not associated with any people or country The Law of Islam is eternally applicable" it is based on the same principles of nature on which man has been created"—Dr. Abdul Ghani.

"இஸ்லாம் மத தத்துவம் அபேதமாய் உலக மக்கள் எல்லோருக்குமே பொருத்தமானது. ஏனெனில் அது சமீபத்தில் ஏற்பட்ட மதமானதினால் மிகவும் திருத்திய மதமென்றே சொல்லுதல் வேண்டும்."—E. V. Ramasamy Naickar,

24—8—1930

APPLY TO
THE RATIONALIST PUBLICATI
PROP: GURU. RAMALINGAM
No. 96. SAMI NAICKEN STRE
CHINTADRIPET. MADRA

Printed at the
Sri Kanthimathi Vilasam Press,
Tirunelveli Junction.

Price Twelve Annas] 1942. [விலை 12 அணா.

REVISED PRICE Rs. 1/-

மகமத் நபி

(ஸி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்)

பிறப்பும் வளர்ப்பும்

கொண்டாடப்படுகிறவர் என்ற கருத்துள்ள பெயர் வாய்ந்த மகமத் அரேபியா தேசத்தில் மக்கா நகரத்தில் கிறிஸ்து பிறந்த 572-ம் வருஷத்தில் ஆகஸ்டு மாதம் 29-ந் தேதியில் பிறந்தார்.

மக்கா நகரம் எப்பொழுது உண்டாக்கப்பட்டதென்று நிச்சயமாய்க் கண்டு பிடிக்கப்பட வில்லை. அனேக ஜாதியார் முறையே அதை ஆண்டு வந்தார்கள்; முடிவில் அவர்களுக்குள் எவ்விதத்திலும் மேன்மை வாய்ந்த கோரேஷ் (குறைஷி) ஜாதியாருடைய ஆளுகைக்குள் அது வந்தது.

தற்காலத்தில் காபாவென்று விளங்கும் புண்ய ஸ்தமே அவர்களின் புராதனக் கோயில். அரேபியாவிலுள்ள எல்லா நகரங்களுக்கும் மக்கா மேலானதாய் வியாபாரத்தாலும், மதத்தாலும் சிறப்படைந்து, தலைநகரமாய் வழங்கினதற்கு இதே காரணமென்று சொல்லலாம். மகமத் நபி பிறந்த காலத்தில் 10 பிரபுக்கள் சேர்ந்து அதை ஆண்டு வந்தார்கள். நபியின் பாட்டனே அவர்களுக்குத் தலைவன். நபியின் தகப்பன் அவர் பிறப்பதற்கு முன்பே பரலோகஞ் சென்றார். அவருடைய தாய் ஆறுவயதான பொழுது தன் கணவனைப் பின்பற்றினாள்.

இப்படி மாதாபிதாக்கள் இல்லாமல் குழந்தைக்கு பால்யத்தில் கிடைக்கும் அன்பு ஆதரவு முதலிய யாதொரு சௌக்கியமுமற்று, நபி மூன்று வருஷங்கள் வரையில் தன் பாட்டனதுடைய வீட்டில் வஸித்தார். அந்தப் பெரியவரும் காலகதியடைந்த பொழுது அவருடைய மகனும் நபியின் மாமனுமான அபூதாலிப் என்றவருடைய வசத்தில் ஒப்புவிக்கப்பட்டு தன் பால்யத்தை அங்கேயே கழித்தார்.

த்யானம்

சிறுவயது முதல் மகமத் தன்னைப் போன்ற பிள்ளைகளுடன் கூடி வேடிக்கையிலும் விளையாட்டிலும் காலத்தைக் கழிப்பதென்ற வாடிக்கை உள்ளவரல்ல. தனியே இருந்து, ஒருவரோடும் பேசாமல் மனிதஸஞ்சார மில்லாத மணல் வெளிகளிலும் பாலைவனங்களிலும் சென்று ஸகல லோகங்களுக்கும் கர்த்தாவான கடவுளின் பெருமையையும் மகிமையையும்

உத்தம குணங்களையும் மனிதனுடைய அக்ஞானத்தையும் அல்ப சக்தியையும் குறைகளையும் அவர்களை நீக்கும் உபாயத்தையும் பற்றி பொழுது போனது தெரியாமல் ஆழ்ந்த யோசனையில் இருப்பார். லோக ரீதியாய் அவருக்குப் படிப்பும் பாண்டித்யமும் கிடையாது. கடவுளால் உண்டாக்கப்பட்ட ஆகாசம், பூமி,மலை, நதி, காடு, பாலைவனம், இடி, மழை, மின்னல், காற்று, சூர்யசந்திரர்கள், நக்ஷத்திரங்கள் முதலிய புஸ்தகங்களிலிருந்தும் தன்னைச் சூழ்ந்திருக்கும் மனிதர்கள் மிருகங்கள் பறவைகள் முதலிய ஜீவஜந்துக்களின் நடை உடை பாவனை ஒழுக்கம் ஆசாரம் வழக்கம் வாடிக்கை யென்ற பள்ளிக்கூடங்களிலிருந்தும் அவர் கற்ற கல்வியே ஈச்வரனுடைய எல்லையற்ற அருளுக்கும் லோகத்திலுள்ளவர்களுடைய க்ஷேமத்திற்கும் ஆதாரமாயிருந்தது.

அவருடைய தாய்க்கு அமினாவென்று பெயர். பெயருக்கு ஒத்தபடி அழகும் நற்குணமும் வாய்ந்த சீமாட்டி, இப்பொழுதும் அந்தப் பெயரை நினைக்கும் ஒவ்வொரு முஸ்லீமுடைய மனதில் அன்பும்கருணையும் பொங்குகின்றன. இப்படி நபி குழந்தைப் பருவம் கழிந்து பால்யம் வாய்ந்து யௌவனமடைந்தார். எப்பொழுதும் அவருடைய மனதில் ஒரே கவலை குடிகொண்டிருந்தது. தன்னைச் சூழ்ந்திருந்தவர்கள் நற்குணங்களின்றி கெட்ட வழிகளில் இறங்கிப் பாப புண்ய விவேகமற்று, தயை தாக்ஷண்ய மில்லாமல் தங்களுக்கும் பிறருக்கும் கேடு விளைவித்துக் கொண்டு வீண்காலம் கழிக்கிறார்களே.

கருணைக் கடலாயும், எல்லாம் வல்ல லோகநாதனாயும், ஞானநிதியாயும், ஆனந்தப் பெருக்காயும் விளங்கும் ஆண்டவன் இருக்க உயிரற்ற கல்லையும் கட்டையையும் விக்கிரஹங்களாய் அமைத்து, பூஜித்து, அவைகளே தங்களுக்கு எல்லா ஸுகத்தையும் கொடுக்குமென்றும் எல்லாத் தீங்கையும் போக்குமென்றும் நம்பி, மோசம் போகிறார்களே; மனதாலும் நினைப்பதற்கு ஸஹிக்காத கொடிய பழக்கங்களையும் ஆதாரங்களையும் கைப்பற்றி நடக்கிறார்களே; எப்பொழுதும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதும் துரோஹஞ் செய்வதும் பழிக்குப் பழி வாங்குவதும் குடிவெறியால் பிறந்த குழந்தைகளை உயிருடன் புதைப்பதும், அவர்களுக்கு வருத்தத்தையும் வெறுப்பையும் சற்றேனும் உண்டாக்க வில்லையே; அவர்களைச் சூழ்ந்திருக்கும் யூதர்களும் கிருஸ்தவர்களும் போற்றும் மதமும் ஆசாரமும் அதைவிடக் கெடுதலாயும் கொடியதாயும் மூர்க்கமாயுமிருந்தது.

அவர் அடிக்கடி தன் மாமனுடன் வியாபாரத்திற்காகப் பலவிடங்களுக்குப் போவதுண்டு. அப்படி ஸிரியாவென்ற தேசத்திற்கு இரண்டு முறை போயிருந்த பொழுது அங்கே பார்த்த காரியங்கள் அவருக்குப் பயத்தையும் வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கின. ''ஜனங்களே! நீங்கள் ஒரே தகப்பனுக்குப் பிறந்த ஸஹோதரர்களைப் போல் நேசத்துடன் வாழுங்க''ளென்று உபதேசித்த ஈஸா நபியின் மதத்தைக் கைப்பற்றின கிருஸ்துவர்கள் பலகக்ஷிகளாய்ப் பிரிந்து, ஒருவரை ஒருவர் வெறுத்து, த்தேஷித்து துரோஹஞ் செய்து, வேர் அறுத்துக்கொண்டிருந்தார்கள். ஓயாமல் நடக்கும் கொலைகளாலும் கொள்ளைகளாலும் சண்டைகளாலும் தேசமெங்கும் பாழாயிற்று. பயிரிடுதல் கைத்தொழில் வியாபாரம் முதலிய யாதொன்றும் நடக்கவில்லை. ஜனங்களுடைய உயிரும் பொருளும் துஷ்டர்களின் வசத்து செருமோவென்று எப்பொழுதும் திகிலையே உண்டாக்கிற்று. படிப்பையும் கவலையையும் நாகரிகத்தையும் ராஜ நீதியையும் பற்றிப் பேச்சென்ன? பலமே தர்மம், பலவானே ராஜா. மனம்போனபடி நடப்பதே மதம். தானே ஈச்வரன். இப்படிப்பட்ட அதோகதி யடைந்த ஜனங்களைப் பார்க்கப் பார்க்க நபியின் மனமுறுகிற்று. கண்ணீர் பெருகிற்று. ஐயோ! இவர்களை இந்தக் கோரமான நிலைமையிலிருந்து கரையேற்றும் காலமும் வருமோ! கடவுளுக்கு எப்பொழுது அருள் பிறக்குமோ! அதற்கு வழி ஏதோ என்று இரவும் பகலும் அதே கவலையாய் ஊணுறக்கமின்றி தன்னையும் உலகத்தையும் மறந்திருந்தார்.

விவாஹம்

மகமத் நபிக்கு 25-வது வயதான பொழுது அவர் கதீஜாவென்ற சீமாட்டியை மணம்புரிந்தார். உயர்ந்த குலமும் அழகும் பெருந்தன்மையும் ஞானமும் நற்குணமும் வாய்ந்தவள். அவ்விருவருக்கும் 15 வயது ஏற்றத்தாழ்வுண்டு. ஏராளமான செல்வமுடையவளாதலால் நபிக்குக் குடும்ப விஷயமான கவலையும் ஒரு தொழிலைச் செய்து பிழைக்க வேண்டுமென்ற நிர்பந்தமுமில்லை. அது மாத்திரமல்ல. அந்த அம்மாளுக்குத் தன் கணவனிடத்தில் எல்லையற்ற அன்புண்டு. அவர் தனியே இருந்து த்யானத்திற்லாழ்ந்து தன் கவலை தீருவதற்கு வழி காணாமல் தபித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவரும் பொழுதும் வெளிதேசங்களுக்குப் போய் அங்குள்ள கோரங்களைப் பார்த்து பயந்து நடுங்கி, ஊருக்குத் திரும்பி

வரும்பொதும், அந்த உத்தமி அவரைத் தேற்றி ஆறுதல் சொல்லி 'ஆண்டவனுடைய கிருபை வரும் காலத்தை யார் அறிவார். சூர்யன் உதிக்குமுன், இருட்டு அதிகமாயிருப்பது ஆச்சர்யமல்ல'' வென்பாள். அவருடைய பகைவர் ஓயாத மூர்க்கத்துடன் அவரை ஊரூராய்த் துரத்திக் கொல்லப் பார்த்த பொழுது அந்தஅம்மாள் அவரை விடாமல் கூடவிருந்து அவருடைய கஷ்டங்களைத் தானும் அனுபவித்து அவருடைய தைர்யமும் உத்ஸாஹமும் குறையாதபடி தேற்றி வந்தாள்.

அல் அமீன்

இப்படி 15 வருஷங்கள் வரையில் அவர் அந்த நகரத்திலுள்ள ஜனங்களால் அன்புடனும் ஆதரவுடனும் கொண்டாடப்பட்டு அவர்களால் அல் அமீன் நம்பத்தகுந்தவரென்று கௌரதைப் பட்டமளிக்கப்பட்டு வஸித்துக் கொண்டிருந்தார். தனியே யிருந்து தியானஞ் செய்வதும் தான் மேல் நடத்த வேண்டிய கார்யங்களைப்பற்றி ஆலோசிப்பதும் அவருடைய தினசரியையாயிருந்தது. ஒரு நாள் இராத்திரியில் ஆழ்ந்த யோசனையிலிருக்கும் பொழுது ஆண்டவன் அவருடைய மனதில் பதியும்படி அவருடன் பேசி, சில விஷயங்களைக் கட்டளையிட்டார். அவருக்கு ஆச்சர்யமும் பயமும் நடுக்கமும் ஏற்பட்டன. அந்தக் காட்சியைத் தன் அருமை மனைவியுடன் கலந்து பேசும்பொழுது தனக்கு எங்கே பைத்தியம் பிடித்துவிட்டதோ வென்று நினைத்து நினைத்துச் சொல்ல முடியாத துயரமடைந்ததாய்த் தெரிவித்தார். அந்த அம்மாள் அவரைத் தேற்றி, நீங்கள் ஆண்டவனுடைய தூதனாய் ஜீவ கோடிகளுக்கு அவருடைய திருவுள்ளத்தையும் கட்டளையையும் தெரிவிக்க ஏற்பட்டிருக்கிறீர்கள். ஆண்டவனிடத்தில் உங்களுக்குள்ள விச்வாஸமும் அன்பும் பக்தியும் நம்பிக்கையும் எங்கே போயிற்று. அவர் தயாநிதியல்லவா? ஞான மூர்த்தியல்லவா? அவருடைய அருமைக் குழந்தைகளான மனிதர்களின் க்ஷேமத்தைப் பற்றி அவருக்குக் கவலையில்லையா? அவருடைய திருவாக்கை மறுக்காமல் எல்லாவற்றிற்கும் அவரையே நம்பி அவரிடத்தில் பாரத்தை வைத்து அவருடைய ஊழியமென்றும் அவருக்குப் பிரியமான வேலையென்றும் எண்ணி, நான் செய்கிறேன். இதின் லாப நஷ்டம் என்னுடையதென்று அஹம்பாவங்கொள்ளாமல், நான் அவருடைய அடிமை, அவரே ஆண்டவன், அவரே அவருடைய கார்யத்தை என்னால்

செய்து கொள்ளுகிறாரென்று பூர்ண நம்பிக்கையுடன் நடந்து வந்தால் அவர் உங்களுக்கு அதற்கு வேண்டிய ஞானத்தையும் திறமையையும் பலத்தையும் கொடுப்பா''ரென்றாள்.

பிரசார வேலை

அன்று முதல் அவர் தன் இனத்தாரான கோரேஷ் ஜாதியாரையும் சுற்றிலுமுள்ள ஜனங்களையும் அக்ஞான மென்ற இருட்டிலிருந்து ஞானஸூர்யனுடைய கிரண வெளிச்சத்திற்குள் கொண்டு வருவதற்கும் மூர்க்கத்தாலும் மூடத்தனத்தாலும் அவர்கள் அனுசரித்து வந்த கொள்கைளை மாற்றுவதற்கும் ஆண்டவனுக்கும் மனிதர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளைப் போதிப்பதற்கும் இடைவிடாமல் உழைத்து வந்தார். அவருடைய உபதேசத்தைக் கேட்டு ஒப்புக் கொண்டு, அவர் ஆண்டவனுடைய தூதனென்று நம்பி, அவருக்கு சிஷ்யரானவர், அவருடைய மனைவியான கதிஜாபீபீ, பிறகு தன் மாமனான அபூதாலிப்பின் மகன் அலி, தைர்யத்திலும் பெருந்தன்மையிலும் நிகரற்ற ஹம்ஸா, பக்தியில் சிறந்த அபூபேகர் முதலிய பலர்-அவருடன் பல வருஷங்களாய் நெருங்கிப் பழகி, அவரிடத்தில் அன்பும் பக்தியும் வைத்தவர்கள் அவரை நம்பி, ஆதரித்தார்கள். அவர்களில் பெரும்பாலார் மேலான அந்தஸ்தும் ஐச்வர்யமும் புத்தியுமுள்ளவர்கள்; மற்றவர் இஸ்லாம் மதத்தின் முதலாவது முவெஸ்ஸினான பவார் என்ற ஆப்பிரிக்கா தேசத்து நீக்ரோ அடிமையைப் போல் ஸாதாரணமான பிறப்பும் தொழிலுமுடையவர்கள். அதற்கு முன்பு நபியை வெகு பிடிவாதமாய் எதிர்த்த ஒமார்(ஹலரத் உமர்(ரலி)) அவருடைய மதத்தில் சேர்ந்து அதற்கு அபாரமான உதவி செய்தார்.

மதத்வேஷம்

நபியையும் அவருடைய சிஷ்யர்களையும் மற்ற ஜனங்கள் பலவிதத்தில் அவமதித்து, உபத்திரவித்து வந்தார்கள். ஆனால் அவர் தன் மன நிலையிலிருந்து எள்ளளவேனும் அசையவில்லை. ஆண்டவன் தன்னிடத்தில் ஒப்புவித்த கார்யத்தைச் செய்வதில் சற்றேனும் பின் வாங்கவில்லை. பகைவரின் கோபமும் தொந்திரவும் ஸஹிக்க முடியாமற் போன பொழுது தன் சிஷ்யர்களை அழைத்து, ''நீங்கள் ஆப்ரிக்காவிலுள்ள அபிஸீனியா தேசத்தில் நெகஸ் என்ற அரசனுடைய ராஜ்யத்திற்குச் செல்லுங்கள். அவன் தாராளமான மனதும் பொறுமையும் பிறரை ஆதரிக்கும்

தன்மையுமுள்ளவனென்று சொல்லுகிறார்கள். நீங்கள் சில காலம் அங்கே தங்கியிருந்து பிறகு ஆண்டவனுடைய கிருபையால் நமக்குத் துன்பம் நீங்கி, க்ஷேமம் விளையும் பொழுது இங்கே வரலா''மென்றார். அப்படியே சிலர் சென்றார்கள். கோரேஷ் ஜாதியார் அதைக் கேள்விப்பட்டு, தூதர்களை யனுப்பி, அவ்வரசனிடத்தில் ''இவர்கள் எங்களுடைய புராதன மதத்தை விட்டு, அன்னிய மதத்தைப் புதியாய்க் கைப்பற்றினவர்கள். இவர்களை விதிப்படி விசாரித்துக் கொலை தண்டனைக்குட்படுத்த வேண்டும். எங்களிடத்தில் ஒப்புவியுங்க'' ளென்று வேண்ட அவ்வரசன் தன்னைச் சரணமென்று வந்தடைந்தவர்களைத் தருவித்து, ''இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்''ளென்றார். அலியின் ஸஹோதரன் அவர்களுக்குத் தலைவனாய் நின்று, ''மஹா ராஜா! நாங்கள் வெகுகாலமாய் அக்ஞானமென்ற இருளால் மூடப்பட்டு, ஆபாஸமான கொள்கைகளைக் கைப்பற்றி காட்டு மிருகங்களைப் போல் பிழைத்து வந்தோம். விக்ரஹங்களைப் பூஜித்தோம்; பிறருடைய பொருளையும் பெண்டுகளையும் அக்கிரமாய்க் கைப்பற்றினோம்; பிணங்களைத் தின்றோம்; அசுத்தமான வார்த்தைகளைப் பேசினோம்; நியாயம் இறக்கம் மரியாதை முத்லியவற்றைத் துறந்தோம். பலமே கடவுளென்று இருந்தோம். ஆண்டவன் கருணை கூர்ந்து எங்களுக்கு ஒருவரை அனுப்பினார். அவருடைய பிறப்பையும் உண்மையையும் நேர்மையையும் பரிசுத்தத்தையும் நன்றாய் அறிவோம். கடவுள் ஒன்றே, பலவல்ல. அவருடன் தாழ்ந்த குணங்களைச் சேர்க்கவேண்டாம். விக்ரஹங்களைப் பூஜிக்க வேண்டாம். உண்மையைப் பேசுங்கள். சொற்படி நடவுங்கள். ஜீவகாருண்யம் பச்சாதாபம் முதலியவற்றைக் கைக்கொள்ளுங்கள். பெண்டுகளைப் பற்றி அவதூராய்ப் பேசவேண்டும். தாய் தகப்பனில்லாத குழந்தைகளின் பொருளைக்கைப்பற்ற வேண்டாம். பாபச் செயல்களையும், கொடிய வழக்கங்களையும் விடுங்கள். கடவுளைப் போற்றி தானம் கொடுத்து விருதங்களைக்(விரதம், நோன்பு) கைக்கொள்ளுங்களென்று உபதேசித்தார். நாங்கள் அவரை நம்பி, அவருடைய உபதேசத்தின்படி நடக்கிறோம். அதற்காக இந்த ஜனங்கள் எங்களை எல்லாவிதத்திலும் உபத்ரஞ் செய்து மறுபடியும் பழைய வழக்கங்களை அனுசரிக்கும்படி நிர்ப்பந்திக்கிறார்கள். அதைப்பொறுக்க முடியாமல் தங்களை வந்து சரணமடைந்ததோ'' மென்றார்கள்.

நபிமாத்திரம் இருந்த விடத்தை விட்டசையாமல்

அங்கிருந்தவர்களுக்கும் வியாபாரத்திற்காகவும் யாத்திரைக்காகவும் அங்கே வந்த ஜனங்களுக்கும் பயமில்லாமல் தன் கொள்கையை உபதேசித்தார். ''மத்யானத்தில் சூர்யனுடைய பிரகாசமும் இரவில் உலகமெங்கும் கருப்பு வலையால் மூடப்படுவதும் மறுபடியும் கிழக்கிலும் மேற்கிலும் உதித்து அஸ்தமிப்பதும் ஆண்டவனுடைய பெருமையை விளக்குகின்றன. அதைப் பார்த்தும் கொடுமையையும் அக்கிரமத்தையும் விடும்படி உங்களுக்குத் தோன்றவில்லையே; இவ்வுலகத்தில் உங்களுடைய எண்ணங்களும் சொற்களும் செயல்களுக்கு ஒன்றும் பாக்கியில்லாமல் ஆண்டவனுடைய எதிரில் படிக்கப்பட்டு தராசில் வைத்து நிறுத்தப்படும். உயிருடன் நீங்கள் புதைக்கும் குழந்தைகளை எந்தக் குற்றத்திற்காக நீங்கள் இப்படிக் கொன்றீர்களென்று கேட்பார். அப்பொழுது உங்களுக்கு அவரைத்தவிர யாரும் துணையில்லை''யென்றார்.

அதைக்கண்டு கோரேஷ் ஜாதியார் அவரைக் கலைத்து, மட்டில்லாத திரவியத்தையும் அதிகாரத்தையும் கொடுப்பதாய்ச் சொல்லியும் தங்களுடைய பழய வழங்கங்களையும் தெய்வங்களையும் அழிக்க வேண்டாமென்று வேண்டியும் அவர் அதற்குச் செவி கொடுக்காததைக் கண்டு கோபம் மூண்டு அவரைக் கொல்ல எத்தனித்தார்கள்.

நபிஹிஜராத் அங்கிருந்து வெளிப்பட்டு, அருகிலுள்ள தாயப் என்ற நகரத்திற்குப் போய் அங்கேயாவது கவலையற்றிருக்கலா மென்றெண்ணினார். ஆனால் அவர்கள் மகமதைக் கல்லால் அடித்துக் காயப்படுத்தி ஊரைவிட்டு வெகுதூரம் வரையில் துரத்தினார்கள். அப்பொழுது வடக்கிலுள்ள யாத்ரெப் என்ற நகரத்திலிருந்து சிலர் அவரைத் தங்களிடத்திற்கு வரவேண்டுமென்று தூதனுப்பினார்கள். கிறிஸ்து பிறந்து 622 வருஷம் ஜூலை மாதம் 16-ம் தேதியில் மகமத் நபியும் அபூபேகரும் மக்காவை விட்டுப் புறப்பட்டு, மூன்று நாட்கள் வரையில் கோரேஷ் ஜாதியாரால் துரத்தப்பட்டு யாத்ரெப் நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இப்படி நபி மக்காவை விட்டு வெளிப்பட்டதற்கு ஹிஜ்ராத் என்று பெயர் கொடுக்கப்பட்டது.

அதற்கு முன் கதீஜாபீபீ என்ற மாதுசிரோமணி ஆண்டவனுடைய திருவடிகளில் சேர்ந்தார். அவளுக்குப் பிறந்த புத்திரர்களெல்லாம் பால்யத்தில் இறந்தார்கள். மிகுந்த மூன்று பெண்களில் பத்தீமா வென்ற கடைசிப்பெண் அலியை மணம் புரிந்தாள். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த சையத் ஷெரிப் என்ற பிரபுக்களின் பரம்பரை அவளுடைய ஸந்ததிகளே.

மதீனா

நபி அந்த நகரத்திற்கு வந்த காரணமாய் ஜனங்கள் அதன் பெயரை

மாற்றி, மதீனா அன் நபி (நபியின் நகரம்) என்று பெயரிட்டார்கள். அவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் ஸகலசௌக்கியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து ஸஹோதரர்களைப் போல் ஒத்து வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நபி அன்ஸார் (உதவி புரிந்தவர்கள்) என்று கௌரவப்பட்டத்தை அளித்தார்.

அவரை அந்தப் பட்டணத்துத் தலைவனாய் நியமித்தார்கள். உடனே அவர் அங்குள்ள ஜனங்களின் கடமைகளையும் அருகில் வஸித்த யூதர்கள் அனுஸரிக்கவேண்டிய முறைகளையும் விவரித்து அதுவரையில் அந்நகரத்தைப் பாழாக்கி வந்த கொலையும் கொள்ளையும் சண்டையும் ஒழிய வேண்டுமென்றும் எல்லா வியவஹாரங்களும் நபிக்கு முன்பாகவே தீரவேண்டுமென்றும் உத்திரவிட்டார்.

இஸ்லாமின் குடியரசு ஆரம்பித்த காலம் இதே. அந்நகரத்தில் ஓர் ஸாதாரணமான பள்ளிவாசலை அமைத்து, அதில் நபி ஒவ்வொரு நாளும் தானம் தர்மம் ஒற்றுமை ஜீவகாருண்யம் பக்தி முதலியவைகளைப் பற்றிப் பிரசங்கஞ் செய்தார்.

மதீனாவைப் பிடிப்பதற்கு கோரேஷ் ஜாதியார் பலதடவை முயன்றார்கள். அருகிலிருந்த யூதர்களை வசப்படுத்திக் கொண்டு இயன்ற வரையில் போர் புரிந்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. யூதர்கள் எல்லைக்கப்பால் துரத்தப்பட்டார்கள். நாற்புரத்திலும் படைகளை அனுப்பி, அங்கங்குள்ள ஜாதியார்களின் கொடிய செயல்களை அடக்கவும் ஏழை பாழைகளைக் காப்பாற்றவும் ஒற்றுமையுடன் வாழவும், நபி தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். அப்பொழுது அவர் ஸேனைத் தலைவனுக்கு இட்ட கட்டளையை எந்த தேசத்தாரும் ராஜதந்திரி ஒப்புக்கொண்டு புகழத்தக்கது. அவருடைய உண்மையான நோக்கத்தையும் பெருந்தன்மையையும் வளர்க்குகிறது. அதாவது-

''கபடத்தையும் துரோஹத்தையும் ஒழியுங்கள், ஸ்திரீயையாவது குழந்தையையாவது வ'யது சென்றவர்களையாவது நோயாளிகளையாவது தொந்திரவு செய்யக்கூடாது. நமக்குக் கெடுதி செய்தவர்களைத் தண்டிப்பது நியாயம். ஆனால் வரம்பு மீறி நம்மை எதிர்க்காதவர்களின் கட்டடங்களையும், வயல்களையும், தோட்டங்களையும் அழிப்பது ஆண்டவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணுமெ''ன்றார்.

ஹெஜயிரா(ஹிஜ்ரி) ஒன்பதாவது வருஷத்தில் மகமத் நபி கிருஸ்துவர்களுக்குக் கொடுத்த ஓர் சாஸனம் அவருடைய உத்தம குணங்களை இன்னும் நன்றாய் வெளிப்படுத்துகிறது. அதாவது உங்களுடைய உயிரும் பொருளும் மதாசாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் அங்கிருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் ஒரே

விதமாய்க் காப்பாற்றப்படும். ஆண்டவனுடைய திருவாக்கையும் அவருடைய நபியின் பிரமாணத்தையும் நம்புங்கள். **உங்களுடைய கடமைகளையும் உரிமைகளையும் மாற்றுவதில்லை. மதஸம்பந்தமான அதிகாரிகளை மாற்றுவதில்லை; ஆலயங்களை அழிப்பதில்லை.** ஆனால் முன்போல நீங்கள் கொலை கொள்ளை குடும்பச் சண்டை செய்ய விடமாட்டேன். யுத்தத்திற்கு ஸேனைகளை அனுப்ப வேண்டியதில்லை. ஸைன்யங்களுக்கு சாமான்கள் கொடுக்கும்படி கட்டாயப் படுத்தவில்லை''யென்றார்.

வெகு காலம் வரையில் பல முயற்சிகளைச் செய்து கோரேஷ் ஜாதியாருடன் 10 வருஷங்கள் வரையில் ஸமாதான உடன்படிக்கை ஏற்படுத்தினார். அது நல்ல ஸமயமென்று நினைத்து, அவரும் அவருடைய சிஷ்யர்களும் மக்காவிற்குப் புண்ய க்ஷேத்திர யாத்திரை செய்தார்கள். அவர்களுடைய பெருந்தன்மையும் மரியாதையையும் நடத்தையையும் கவனித்த பல கோரேஷ் ஜாதியார் பலர் இஸ்லாமைச் சேர்ந்தார்.

அக்காலத்தில் கான்ஸ்டான்டி நோபில் ராஜ்யத்தை ஆண்டு வந்த எக்ராக்லிடஸ் என்ற அரசனுக்கும் பெர்ஸியா(பாரசீகம்) ராஜ்யத்தை ஆண்டு வந்த குஸ்ரூ என்றவனுக்கும் நபி தூதர்களை அனுப்பி இஸ்லாமில் சேரும்படி வற்புறுத்தினார். கிரேக்க அரசன் மரியாதையுடன் பதில் அனுப்பினான். பெர்ஷியா மன்னனோ வெகு இறுமாப்படைந்து, தூதர்களை அடித்துத் துரத்தி, நபியின் கடிதத்தைக் கிழித்தெரிந்தான். அதைக் கேட்டவுடன் அவர் ''அவனுடைய ராஜ்யமும் இப்படியே சிதைந்துவிடு'' மென்றார். பிற்காலத்தில் அவருடைய வார்த்தை பலிக்கவில்லையா?

கோரேஷ் ஜாதியார் உடன்படிக்கை செய்து கொண்ட ஒரு வருஷத்திற்குள் அதை மீறி நடந்து முன்போல் அக்கிரமங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள்; அதைக் கண்டு இதை இப்படி அலக்ஷியமாய் விடக்கூடாதென்று ஹிஜெயிரா 8-வது வருஷத்தில் பெரிய சைன்யத்துடன் மக்காவின் மேல் படையெடுத்துச் சென்று கோரெஷ் ஜாதியாரை சண்டையில் முறியடித்து, பெட்டிப் பாம்பைப் போல் அடக்கினார். அதுவரையில் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் எண்ணிறந்த கெடுதிகளைச் செய்து, உபத்திரவித்த பகைவர் தன் வசத்தில் அகப்பட்ட பொழுது ''அவர் என்ன செய்வாரோ''வென்று நடுங்கினார்கள். ஆனால் நபியோ அவர்களை அன்போடும் ஆதரவோடும் நடத்தி, அவர்கள் தனக்குச் செய்த தீயச் செயல்களை முற்றிலும் மறந்தார். ஒரு வீட்டிலாவது கொள்ளை யிடவில்லை. ஒருவனையாவது துன்பப்படுத்தவில்லை. அவர்களுடைய விக்ரஹங்களை மாத்திரம் தாக்ஷிண்ய மில்லாமல் அழித்தார்; அவைகளை அதுவரையில் நம்பிப் பூஜித்தவர்கள் அந்த மஹாபாபத்திற்காக தங்களுடைய

தெய்வங்கள் இஸ்லாமியர்களைச் சாம்பலாக்கி விடுமென்று எண்ணி இருந்ததெல்லாம் வீணாயிற்று. விக்ரஹங்கள் அழிக்கப்பட்டும் மகமதியர்களுக்கு யாதொரு தீங்கும் நேராததைக் கண்டு, அவர்கள் ஆச்சரியமடைந்து மயக்கமும் அக்ஞானமும் நீங்கி, ஒரேகூட்டமாய் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தார்கள்.

ஒன்பதாவது வருஷத்தின் பல தேசங்களிலிருந்து நபியிடத்தில் தூதுக்கள் அனுப்பப்பட்டன. அவைகளை அன்புடன் ஆதரித்து, இஸ்லாமில் சேர்த்து, அவர்களுடைய ஸ்வதந்திரங்களையும் உரிமைகளையும் காப்பாற்றி, அவர்களுக்கு மதக் கொள்கையை உபதேசிப்பதற்கு தன் சிஷ்யனை அனுப்பினார். ''அவனுக்கு ஜனங்களுடன் பொறுமையோடும் அன்போடும் பழகவேண்டும். கோபத்தையும் கடுமையையும் பொறாமையையும் விலக்க வேண்டும். அவர்களை உத்ஸாஹப்படுத்த வேண்டும். ஆறுதல் சொல்ல வேண்டும். தைரியத்தையும் ஊக்கத்தையும், சுருசுருப்பையும் குறைக்கும் சொற்களைப் பேசக்கூடாது. யூதர்களும் கிருஸ்துவர்களும் உங்களைக் கண்டு, மோக்ஷத்திற்கு மார்க்கம் யாதென்று கேட்டால் ஸத்ய ஸ்வரூபியான ஈச்வரனுக்குப் பிரியமான கார்யத்தைச் செய்வதும் ஜீவகோடிகளுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி புரிவதுமே யென்று சொல்லுங்க'' ளென்று எச்சரித்தார்.

கடைசி யாத்திரை

பத்தாவது வருஷத்தில் நபி லக்ஷக்கணக்கான சிஷ்யர்களுடன் மக்காவிற்கு யாத்திரை செய்து, காபாவில் தொழுதார். அப்பொழுது அரபாத்தென்ற குன்றில் நின்றுகொண்டு, பல்லாயிரம் ஜனங்களுக்குச் செய்த பிரசங்கத்தில் ''ஜனங்களே! நான் சொல்வதைக் கவனத்துடன் கேளுங்கள். அடுத்த வருஷத்தில் உங்களுடனிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ தெரியாது. நீங்கள் ஆண்டவனுடைய ஸன்னதியில் போய்ச் சேரும் வரையில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் வாழுங்கள். உயிரையும் பொருளையும் அழிக்கவேண்டாம். உங்களுடைய செயல்களுக்கும் சொற்களுக்கும் எண்ணங்களுக்கும் சரிவர அவரிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

நீங்களும் உங்களுடைய பெண்டு பிள்ளைகளும் ஒருவருக் கொருவர் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை மறக்கவேண்டாம். அவர்களிடத்தில் அன்பையும் ஆதரவையும் காட்டுங்கள். ஆண்டவன் ஸாக்ஷியாக அவருடைய பெயரைச் சொல்லி, பெண்டுகளை மணம் புரிந்திருக்கிறீர்ளென்பதை மறக்க வேண்டாம். உங்களுடைய வேலைக்காரர்களுக்கு உங்களைப் போல் அன்னமும் ஆடையும் கொடுத்துக் காப்பற்றுங்கள். குற்றங்களைப் பலதடவை மன்னித்து எச்சரியுங்கள். அப்படியும் முடியாவிட்டால் அவர்களைத் தொந்திரவு செய்யாமல்

அவர்களுக்குள்ளதை கொடுத்தனுப்பி விடுங்கள். அவர்களும் ஆண்டவனுடைய குழந்தைகளே.''

''இஸ்லாமைச் சேர்ந்த எல்லோரும் ஸகோதரர்களே. ஒருவன் தன் பொருளை மனப்பூர்வமாய் மற்றொருவனுக்குக் கொடுத்தாலொழிய அதைக் கைப்பற்ற நினைப்பதும் பாவமே. இங்கே வந்திருக்கிறவர்கள் வராதவர்களுக்கு என் வார்த்தைகளை நன்றாய் எடுத்துச் சொல்லுங்கள். உங்களைவிட அவர்களுக்கு இதனால் உபயோக முண்டாகலா''மென்றார்.

அந்நிய காலம்

மெதியினாவிற்கு(மதினாவிற்கு) வந்தவுடன் இஸ்லாமைச்சேர்ந்த பல ஜனங்களுடைய ஆளுகை அமைப்பைப் பற்றி நபி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். பலவிடங்களுக்கு தூதர்களை அனுப்பி, அக்கிரமச் செயல்களை ஒழித்து ஸன்மார்க்கத்தைக் கைப்பற்றும்படி உபதேசித்தார்.

இப்படி 25 வருஷங்களாய் இரவும் பகலும் ஓயாமல் பட்ட கவலையும் உழைப்பும் அவருடைய திடத்தையும் பலத்தையும் ஆரோக்யத்தையும் வேர் அறுத்தன. ஆண்டவனுடைய கிருபை இல்லாவிடில் அவர் ஒண்டியாய் தன் பகைவரை எதிர்த்துப் போர்புரிந்து, ஜயித்து அவர்களுடைய அக்ஞானத்தையும் கொடிய செயல்களையும் மாற்றி உண்மையான கொள்கையைத் தழுவும்படி செய்ய முடியுமா? அரேபியாவில் எங்கும் தன்மதம் பரவி இருள் நீங்கி, ஞானோதயமான பொழுது அவர் தனக்கு ஆண்டவன் இட்டவேலை முடிந்ததென்றறிந்தார். ''ஜனங்கள் கோடான கோடியாய் என் மதத்தைச் சேரும்பொழுது நீ என்னைப் போற்று, என் கிருபையைப் பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய். யார் தன்னைத் தேடி அடைகிறார்களோ அவரிடத்தில் ஆண்டவன் கருணை புரிகிறாரென்று அவருக்கு உபதேசிக்கப் படவில்லையா? (கொரான்) ஸூரா (110) சில வருஷங்களுக்கு முன் ஓர் யூதப்பெண்ணால் அவருக்கு இடப்பட்ட விஷம் அவருடைய உயிரை வேரறுத்துக் கொண்டிருந்தது. ஆனால் முடிவு வரையில் அவர் எப்பொழுதும்போல் ஸந்தோஷத்தோடும் உத்ஸாஹத்தோடும் பொருமையோடும் எல்லாக் காரியங்களையும் நடத்திக்கொண்டு வந்தார். மரணமடைவதற்க மூன்று நாட்கள் வரையில் அவர் தானே ஆலயத்தில் போய்த் தொழுது வந்தார். அவர் கடைசித் தடவையில் ஜனங்களுக்கு முன்வந்து உபதேசித்த பொழுது எல்லோரும் கண்ணீர் விட்டலறினார்கள். ''இங்கிருப்பவர்களிடத்திலும் இல்லாதவர்களிடத்திலும் மதத்திற்காக உழைத்துப் பகைவரால் கொல்லப்பட்டவர்களிடத்திலும், ''ஆண்டவன் கருணை புரிவாராக. நீங்கள் இஸ்லாமின் கொள்கைகளை மறக்காது கடமைகளைக் குறைவர நடத்தி,

எங்கும் ஸமாதானமும் நல்லுணர்ச்சியும் பரவும்படி செய்யுங்கள். இவ்வுலகத்தில் யார் தங்களைப் பெருமைப்படுத்திக்கொள்ள வில்லையோ யார் பிறர்க்குத் தீங்கு செய்ய வில்லையோ அவர்களுக்கு உத்தம லோகத்தின் வாழ்வைக் கொடுப்போம். உண்மையான பக்தியுள்ளவர்களுக்கு எல்லா நலமும் கிடைக்கு மென்று நமது ஸத்ய வேதமான கொரானில் ஆண்டவன் சொல்லியிருப்பதை மறவாதீர்''ளென்று முடித்தார்.

ஆனால் அந்தச் சிரமம் தாங்காமல் வீட்டிற்கு வந்து மூர்ச்சையாய்ப் படுக்கையில் விழுந்தார். அப்பொழுது முதல் மெதுவாய் ஆண்டவனைப் போற்றிக்கொண்டும் துதித்துக் கொண்டு மிருந்தார். ஆண்டவனுடைய ஸன்னிதானத்தில் அடியார்களின் கூட்டமென்று சொல்லி மஹமத்நபி வாய்முடி இவ்வுலகத்தைத் துறந்து ஆண்டவனுடைய திருவடிகளை அடைந்தார். அன்று கிருஸ்து பிறந்த 632-ம் வருஷம் ஜூன் மாதம் 8-வது தேதி ஹிஜெயிரா 10-வது வருஷம்.

அவர் செய்த வேலை

ஆண்டவன் மனிதர்களுடைய அக்ஞானத்தைப் போக்கி ஞானோபதேசம் செய்வதற்கு அந்தந்தக் காலங்களில் அனுப்பின நபிகளில் மேலான மகமத் நபி மனிதர்களுடைய நடுவிலிருந்து மறைந்தார். (இஸ்லாம் மார்க்கம் குறித்து அவர் எழுதியுள்ள சில பகுதிகள் இங்கே விடப்பட்டுள்ளது.)

நபியின் குணாதிசயம்

பிறரால் எட்டமுடியாத மனத்தூய்மையையும், பிறருடைய நோக்கத்தை அறிந்து அவர்களுக்குக் கொஞ்சமேனும் வருத்தத்தைக்கொடுக்கக் கூடாதென்ற கவலையும் மரியாதையும் அன்பும் சுத்தமான வாக்கும் அவரிடத்தில் விளங்கின வென்பதற்கு இஸ்லாமிய நூல்களில் எண்ணிறந்த உதாஹரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெரியோரிடத்தில் வணக்கத்துடனும் தாழ்ந்தவரிடத்தில் பொறுமையுடனும் ஏழைகளிடத்தில் அன்புடனும் அவர் நடந்து வந்ததால் எல்லோரும் அவரிடத்தில் அன்பையும் விச்வாசத்தையும் எல்லையற்று வைத்தார்கள். ஆதியில் கேவலம் ஸாமன்ய மதோபதேசகனா யிருந்தவர் பிறகு தேசதேசங்களுக்கு அதிகாரியானாலும் ஒரே சாந்தம், வணக்கம், பெருந்தன்மை, ஸத்யம், சுத்தம் முதலிய குணங்களுடன் விளங்கினார். எப்பொழுதும் அவரை நோயாளியின் அருகிலும் வருந்தினவர்களின் பக்கத்திலும் காணலாம். யார் அழைத்தாலும் தட்டாமல் சந்தோஷத்துடன் போவார். தன் ஆடைகளைத் தானே தோய்த்து சுத்தஞ் செய்வார். தன் ஆடுகளையும் மாடுகளையும் தானே கறப்பார்; தனக்குத்தானே ஊழியன். தெருவில் எந்தப் பிணத்தைக் கண்டாலும்

சுடுகாடு வரையிலும் போய்த் திரும்புவார்; ஒருவனுடைய கையைப் பிடித்தால் அவனாக விடுகிறவரையில் தான் விலகுகிறதில்லை. கொடுப்பதில் வெகு தாராளமானவர்; அஞ்சாத நெஞ்சம் கலங்காத மனதுமுடையவர்; உண்மையாயும் மதுரமாயும் பேசுகிறவர். அவரைக் கண்டவனுக்கு, பக்தி உண்டாகும். பழகப் பழக அன்பு வளரும். அற்பமனிதன் அவரிடத்தில் பேசினாலும் யோசனை கேட்டாலும் புகார் செய்தாலும் அவனை அரசனைப் போல் பாவித்து, அவனுடைய கவலையை இயன்ற வரையில் தீர்ப்பார். ஒண்டியாய்த் துணையில்லாமல் தனமில்லாமல் ஆயிரக் கணக்கான சத்துருக்களின் நடுவில் பயமற்று வஸித்தார். அவர்களுடைய கெட்ட வழக்கங்களை கூசாமல் தயங்காமல் கண்டித்தார். எந்த ஆபத்திலும் உண்மையையும் நியாயத்தையும் விட்டவரல்ல. குழந்தைகள் அவரைக் கண்டவுடன் ஒடி சூழ்ந்துகொண்டு, தங்களுடைய விஷயங்களை அவரிடத்தில் தெரிவிக்கும். அவர் அவைகளுக்கு நடுவில் நின்று அன்பும் அருளும் பொழியும் பார்வையுடன் அவைகள் சொல்வதைக் கேட்டு பதில் சொல்லி, அவைகளுக்கு ஏதாவது கொடுத்தனுப்பாமல் போவதில்லை. அப்பொழுது அவருடைய வாக்கிலிருந்து வரும் சொற்கள் அமிருத தாரையைப் போலிருக்கும். உறுதி தவறாத நண்பன். தர்மம் தவறாத சத்துரு. கருணை தவறாத எதிரி. நியாந் தவறாத அரசன். கடவுளிடத்தில் வணக்கமும் நன்றியறிவும் பக்தியும் தவறாத அடியார் அவரே. பிறந்தது முதல் இவ் உலக வாழ்க்கையும் அதனால் உண்டாகும் ஸுக துக்கங்களையும் நன்றாய்ச் சீர்தூக்கி, பிறருக்கு இயன்றவரையில் உபகாரஞ் செய்து அவர்களைக் கெட்ட வழிகளிலிருந்து திருப்பி, நல்ல மார்க்கத்தில் நடத்திக் கொண்டு போய் கருணைக் கடலான ஆண்டவனுடைய திருவடிகளில் சேர்ப்பிப்பதே தன் கடமையென்று நிச்சயித்து, ஸுக துக்கங்களையும் கோப தாபங்களையும் லக்ஷ்யஞ் செய்யாமல் ஒரேபிடியாய் ஆண்டவன் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றி அவருடைய உபதேசத்தை லோக மெங்கும் பரவச் செய்து கோடான கோடி ஜனங்களைக் கடவுளின் கருணைக்கு ஆளாக்கின மஹமத் நபியை ஆண்டவனால் அனுப்பப்பட்ட தூதனென்று ஒப்புக்கொள்ளாத வருமுண்டோ?

நபி நாயக வரலாறு

(M.S. பூரணலிங்கம் பிள்ளை)

(திருநெல்வேலி மாவட்டம் முந்நீர்ப்பள்ளத்தில் சிவசுப்பிரமணிய பிள்ளை-வள்ளியம்மை புதல்வராகப் பிறந்தவர் பூரணலிங்கம் பிள்ளை

(24.5.1866-10.6.1947) **ஆங்கிலப் பேராசிரியர்; ஞான போதினி இதழ் ஆசிரியர்; தமிழ் இலக்கிய வரலாறு உள்ளிட்ட பன்னூல் ஆசிரியர்)**

அரபி நாட்டிற் சிறந்த அத்னான் கிளையில் உயர்ந்த குறைஷியர் குலத்தில் அப்துல்லாவிற்கும் ஆமினா அம்மையாருக்கும் தீர்க்கதரிசிகள் பலர் கூறியவாறு மக்கா நகரத்தில் ரபீயுல் அவ்வல் மாதம் 12-ம் தேதி திங்கட்கிழமையன்று அஞ்ஞான இருளை அகற்றுமாறு முகம்மது அவதாரமாயினர். இம்மாற்றம் கேட்டதும் பாட்டனார் அப்துல்முத்தலிப் வந்து குழந்தையைப் பார்த்து விட்டு ஆண்டவனுக்குத் தோத்திரஞ்செய்தனர். அவருடைய மகனார் காலஞ்சென்றதையும் பார்க்காமல் குழந்தை பிறந்த ஏழாம் நாள் அவர் பெருவிருந்தளித்தனர். அன்று பேரனுக்கு முகம்மது (புகழுக்குரியன்) என்று நாமகரணஞ் செய்தனர். அக்குழந்தைக்கு 'அக்மத்' எனும் பெயரை அருமைத் தாயார் இட்டழைத்தனள். இரண்டொரு நாளில் தகப்பனை யிழந்த அக்குழந்தை நாட்டு வழக்கப்படி 'ஹலிமா' வெனுஞ் செவிலித் தாயிடம் ஒப்புவிக்கப்பட்டது. அம்மாதரார் அந்த அநாதைக் குழந்தையை ஏற்று ஆறு மாதத்துக்கொருமுறை அதனைத் தாய், பாட்டனாரிடம் காட்டி வந்தனள். ஈராண்டு கழிந்ததும் தாயாரிடங் காட்டச் சென்றபோய் அம்மாது சிரோமணி குழந்தையை மீளவுங் கொண்டுபோய் வளர்க்குமாறு வேண்டினள். நான்கு வயதாகும் வரை குழந்தையை அருமையாக வளர்த்து வந்த அந்த அம்மணி பின் நற்றாயினிடம் கொண்டு சேர்த்தனள். தாயார் மதீனாவில் உற்றாருறவினரைக் காணப்போனபோது ஆறு வயதுள்ள அருமை மகனையு முடன் கொண்டு சென்றனள். இருவரும் திரும்பிவரும் வழியில் 'அப்வாஹ்' எனுமிடத்தில் தாய் தேக வியோகமாயினள். தாயை யிழந்த மகனார் பாட்டனாராதரவிலிருந்து வந்தனர். வயோதிகராகிய பேரனார் சிறியப்பராகிய அபூதாலிப் வசம் அநாதைப் பாலனை ஏற்பித்த சில நாட்களில் இவ்வுலகம் விட்டேகினர். சிறு வயதுள்ள அப்பிள்ளையார் விளையாடுவதில் பிரியமில்லாதவராய் தனித்தவிடத்தில் தனிமையாக இருந்து சிந்தித்தலிலே ஆசைப்பட்டனர். பள்ளிக்குச் சென்றாரிலர். ஆதலால் அவரை 'உம்மி' என்றே உலகம் அழைத்தது. சிறுவயதிலே ஆடு மேய்த்து வந்த இம்மகனார் வியாபாரத்திற்காகப் பெரிய வர்த்தகரான அபூதாலிப் சென்ற பொழுது அவருடன் சிரியா அல்லது ஷாம் தேசத்திற்குச் சென்றனர். புஸ்ரா நகரில் பஹீரா எனும் கிறிஸ்தவத்துறவியின் மடத்தில் இருவரும் தங்கினர். இவ்விளைஞரைப் பார்த்ததும் வேதத்தில் கூறியாங்கு உலக ரக்ஷகராக வரப்போகும் மகான் இவரே யென்று நினைத்து இவருக்கு யூதர்களால் இடையூறு நேரிடாத வண்ணம் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார். இந்த நாட்டில் அரேபியா தேசத்தில் காணப்படாத ஆறுகள், ஏரிகள் முதலான

இயற்கைத் தோற்றங்களைக் கண்டு இவர் மகிழ்ந்தனர். இவை இறைவனுண்டென்னும் உணர்ச்சியைக் கிளப்பின. வர்த்தக முறையில் பல மக்களைப் பார்க்கவும் பழகவும் பலவிடங்களுக்குச் செல்லவும் தருணங் கிடைத்தமையால் உலக அறிவு இயற்கையறிவுடன் சேர்ந்தது. இவர் பிறந்த நாட்டிற்கு வந்த காலத்தில் குறைஷி கீஸ் வமிசத்தவருக்குள் கலகம் நிகழ்ந்தது. அபூதாலிப்பும் சண்டைக்குச் சென்றனர். ஆனால் முகம்மது இதில் கலக்கவில்லை. பின்பு சமாதானம் ஏற்பட்டது. அப்பொழுது முகம்மதுக்கு வயது பதிநான்கு. ஜனங்கள் இவருக்கு 'அல் அமீன்' (நம்பத்தகுந்தவர்) என்ற பட்டத்தைச் சூட்டினார்கள்.

சிறிய பிதாவைப்போன்று முகம்மதும் வர்த்தகஞ் செய்யத் தலைப்பட்டனர். அல் அமீன், தாஹிரா (பரிசுத்தமானவர்) என இவர் மீது மக்களபிமானங் கொண்டமையால் தக்க லாபம் கிடைத்தது. பத்தாண்டுகளாக ஆடு மேய்த்தவர் வியாபாரியாகி சீருஞ் சிறப்பும் பெற்றனர். இவர் பெயரெங்கும் பரவியதால் கதீஜா வெனுஞ் சீமாட்டி இருதரம் மணந்தும் அமங்கலியாகியிருந்த நிலைமையில் குலத்தாலும், குணத்தாலும் செம்மேனிஞ் சிறப்பும் பெற்றிருந்தமையால், இருபத்தைந்து பிராயத்தில் காளைப் பருவமுள்ள இவரைத் தாம் வதுவை(திருமணம்) செய்யவிரும்பி 'மைஸ்ரா' வெனும் அடிமைமூலமாயும் அவருடைய குணாதிசயங்களைக் கேட்டு நபீஸாவென்ற பாங்கியிடம்(தோழியிடம்) தம் நோக்கத்தைத் தெரிவித்தனள். உருவுந் திருவும் வாய்ந்தனளெனினும், பதினைந்து வயதுக்கு மூத்த விதவையைத்தான் மணம் புரியலாமா வென்பதைத் தன் சிற்றப்பருக்கு அறிவிக்க அவரும் சம்மதங்கூறத் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் பேரன்புடனிருந்தனர். இம்மணத்தால் ஏழை மணாளர் செல்வவானாயினர்.

''செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைவல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்''.

ஆயினுஞ் செல்வச் செருக்குச் சிறிது முறாதவர் முகம்மது. ஆனதால் உற்றுழி உதவியது அம்மாதரார் செல்வம். . உரிமை பாராட்டிய மாதரசியும் ஒருமனப்பட்டு வாழ்ந்தமையால் மணவாளரின் பேரும் புகழும் பெருகின. அம்மையாருக்கு ஒரு மகனும் மூன்று பெண்மணிகளும் தோன்றினர். மகன் சிறுவயதிலேயே மறைந்தனன். மகளிர் மூவரும் அரிவை தெரிவைகளாய் மணந்து மக்கட்பேறும் எய்தினர். அம்மையார் கால முழுதும் அன்பரொடு இணங்கி அன்பருடைய கொள்கையையுந் தழுவி வந்தனர். 'ஸைத்'

என்பவர் சண்டையில் பிடிபட்டு விற்கப்பட்ட அடிமையை மனைவி கதீஜா பெற்று அவரைக் கணவனுக்கு அடிமையாக்கினள். கொண்கன்(கணவன்) அவருக்கு விடுதலையளித்தனர். அஃதன்றியும், அவருக்குத் தம் அத்தை மகள் 'சைனப் பீவி'யையும் மனைவியாக்கினர். இதனால் இவருடைய மக்கள்மீது பொலிந்த இரக்கமும் பேரன்பும் ஜொலித்தன. மேலும், அம்மையார் இம்மண்ணுலகை நீத்த பின்னரே ஒருவரின் பின் னொருவராக ஒன்பது காரிகைகளை இவர் மணந்தனர். இவர்களில் சிலர் சண்டையில் உயிர் துறந்தவர்களின் மனைவியர். இவர்களில் யூதப் பெண்மணி ஒருவர். இவ்விதமாக இவர் மணஞ் செய்ததற்குக் காரணங்கள் பலவுள. 'எல்லா மக்களும் கடவுள் மக்களே. மேல் கீழ் இல்லை. இனம் அயல் என்பதும் இல்லை. ஆதலால் வேற்றுமைக் கிடமில்லாமல் அனைவரும் ஒற்றுமைப்பட்டு வாழ்தலே அரேபியா தேசத்திற்குப் பெருமையளிக்கும்', என்பன சில.

இவர்களுமல்லாமல் இப்பெரியாருக்குப் பத்து மனைவிகளும் இருந்தனரென்பர். மேற்கூறிய நோக்கமே இதற்குக் காரணமென்பர். இவர்களில் மரியே என்பவளுக்கு இபுராகிம் என்ற மகன், பிறந்த பதினைந்து திங்களிலே மறைந்தனனெனச் சரிதங் கூறும்.

இஸ்லாம் மதத்தை நிலைநாட்டப் பெருமான்பட்ட அவஸ்தைக்குக் கணக்கில்லை. தனித்திருந்து தியானஞ் செய்யும் வழக்கமிருந்தமையால் முகம்மது அவர்கள் மக்காவிற்குச் சமீபமாயுள்ள ஹிரா எனும் மலைக்குகைக்குப் போய்ச் சிலநாள் தங்கிவந்த காலத்தில் அரேபியருடைய அஞ்ஞானவிருள் நீங்குங்காலம் கிட்டியது. ஒன்றே தெய்வமென்பதை அரேபியர் மறந்து கஅபா எனுந்தொழுகை மண்டபத்தில் பற்பல விக்கிரகங்களை ஆராதித்து வந்ததை ஒழித்தலே தம் கடமையெனக் கருதி இவர் ஆண்டவனைப் பிரார்த்தித்து வந்தனர். ரம்லான் மாதத்தில் ஒரு திங்கட்கிழமையன்று ஞானச் சுடரொன்று தோன்றிற்று. (கே)ஜிப்ரீல் தேவதூதராகக் காணப்பட்டனர். இவருடைய வெளியீடே குர் ஆன் எனப்பட்டது. ஊருக்குத் திரும்பி வந்ததும் தம் முதல் மனைவியிடம் இந்த அற்புதத்தைத் தெரிவித்தனர். அம்மையார் சிலை வணக்கத்தைக் கைவிட்டனர். ஊரார் வசையையும் ஏற்றனர். இவரைப் பின்பற்றி ஒருவரொருவராக நாற்பதுபேர் இவர் தம் கொள்ளையில் பற்று வைத்தனர். இவர்களில் அபூபக்கர் இணைபிரியா நண்பர். இவர் தம் ஆயுள் பரியந்தம் முகம்மது நபியைக் கைவிடாமல் கூடவே இருந்து வந்தனர். அடிமை விடுதலை பெற்ற சைத்தென்பாரும் அவ்வண்ணமே பிரியாதிருந்தனர். நபி அவர்கள் மூன்றாண்டுகளாக மறைந்திருந்து நற்போதனைகள் செய்துவர, நான்காமாண்டில் வெளிப்படையாக ஸபாவெனு மலையடியில் தமது

தீர்க்க தரிசனத்தைப் பற்றித் தம் குலத்தினராகிய குறைஷிகளுக்கு அறிவித்தனர். அதனை ஏற்காத பலரும் இவர் காக்காய் வலிப்புடையவர். ஆவேசமும் மயக்கமும் உடையவர் என்று கூறி இவர்மீது கல்லெறியத் தலைப்பட்டனர். இவருடைய சிற்றப்பரும் இப்புதிய போதனையை விட்டுவிடும்படி நபி அவர்களிடம் மன்றாடினர். அதற்கு நபியவர்கள் இணங்கவில்லை. சில வணக்கத்தைக் கைவிடும்படி பதிலளித்தனர். இதனைச் செவிமடுத்த சிறிய தந்தையார் மனமுருகி 'உமக்கு யாதொரு இடுக்கணும் இடையூறும் வந்தணுகாதபடி நான் உம்மைப் பாதுகாப்பேன்' என்று திருவாய் மலர்ந்தருளினர். குறைஷிகள் எத்தனையோ விதங்களில் இடுக்கண் இழைத்துவந்த போதிலும் நபியவர்கள் மனந் தளராமல் ஊக்கமாகப் போதனையாற்றி வந்தனர். பின்னர் இவர் குலத்தினர் 'உத்பா'வெனுந் தூதரையனுப்பிச் சிலை வணக்கத்தைக் குறை கூறாதிருக்க வேண்டினர். 'பெருந்தனம் வேண்டுமெனின் அதனை அளிப்போம்', 'அரசனாக விரும்பினால் அரசனாய் வீற்றிருக்கச் செய்வோம். உத்தமப் பெண்மீது ஆசையிருப்பின் அதனை நிறைவேற்றுவோம்' என்றும் சொல்லியனுப்பினர். இத்தூதுக்கு இசையாமல் தம் கொள்கையே சிறந்தது என்று மறுமொழி விடுத்தனர்.

''ஏங்குவ ரிரங்குவ ரிருகணீர் விழத்
தேங்குவ ரடிக்கடி தினை மாறியு
நீங்குவ தில்லென நினைத்திட் டுள்ளகம்
வீங்கிட நெட்டுயிர்ப் பெறிந்து வீழ்குவார்''

ஒரு தடவல்(தடவை) நபியவர்கள் கஅபாவிற்குச் சென்றிருந்தபோது குறைஷிகள் பெருமானைப் பிடித்துக் கழுத்தில் நாணிட்டுத் துன்புறுத்தினர். அத்தருணம் பெருமானவர்களை அபூபக்கர் ஆபத்தினின்று விலக்கினார். நபிகள் ஏழை முஸ்லீம் ஆண் பெண்மக்களுக்குப் பலவிதத்துயரமேற்பட்டும் மனஞ்சலிக்காமல் பிடித்தபிடி நெகிழாமல் நாயன்மீதுள்ள பற்றை விடாதிருந்தனர். பெருமானுத்தரவின்படி துன்பமுற்ற முஸ்லீம்களில் எண்பத்து மூவர் 'ஹபஷி' என்ற அபிசினியர் நாட்டில் குடியேறினார்கள். இது 'நுபுவவத்' எனும் ஐந்தாமாண்டினில் நிகழ்ந்தது. ஊரைவிட்டுப் போனவர்களுடைய துயரம் நீங்கவில்லை. கொடிய குறைஷிகளின் தூதர்கள் அங்குஞ்சென்று முஸ்லீம்களை வெளிப்படுத்துமாறு முறையிட்டனர். அங்ஙனஞ் செய்ய மறுத்துவிடவும் தூதர்கள் மக்காவிற்குத் திரும்பினர். பின்னர் மற்றொரு முஸ்லீம் கூட்டம் ஹபஷிக்குச் சென்றது. மக்காவிலிருந்த அபூபக்கர் போன்றவர்கள் நாடு விட்டேக முனைந்தும் முடியவில்லை. வீடுகளின் பக்கத்தில் பள்ளிவாசலை ஏற்படுத்தி ஆங்கே இவர்

தொழுதுவந்தனர். குர்ஆனைப் படித்தனர், கண்ணீர் சொரிந்தனர். இதனை நோக்கிய குறைஷிகள் மேலும் மேலும் துவேஷங் கொண்டனர். அப்பொழுது நபியவர்களின் மற்றொரு சிற்றப்பராகிய ஹம்ஸா என்பர் முஸ்லீமானார். குறைஷிகளின் சூழ்ச்சியொன்றும் பலிக்கவில்லை. பின்பு உமரும் இஸ்லாத்தைத் தழுவினர். இதன்பின் குர்ஆன் பகிரங்கமாகப் போதிக்கப்பெற்றது. இவ்விருவர்களின் மதமாற்றத்தால் குறைஷிகள் திகிலடைந்தனர். அப்படியிருந்தும் முகம்மது நபியவர்களின் குடும்பத்தைக் குறைஷிகள் தாக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அபூதாலிப் அவர்களும் கதீஜா பிராட்டியாரும் காலஞ் சென்றனர். இதனால் நபியவர்களுக்கு வருத்தத்தின் மேல் வருத்தமுண்டாயிற்று. மக்காவிற்குச் சமீபமாயுள்ள 'தாயிப்' என்ற விடத்திற்குப்போய் அங்கேயுள்ள மக்களுக்கு இஸ்லாத்தைப் போதித்தனர். அங்கே வீணர்கள் கூட்டங்கூடி கல்லெறிந்தனர். அதனால் நபியவர்கள் மக்காவிற்குத் திரும்பி வந்தனர். அங்கும் பகைவர்கள் கூச்சலிட்டனர், நிந்தித்தனர். ஆயினும் பேர் பெற்ற 'துபைல்', எனும் மகான் மக்காவிற்கு வந்தபொழுது இக்கூச்சலையும் இறைச்சலையும் கேட்டு உண்மையை ஆய்ந்து முஸ்லீமாயினர். இச்சம்பவத்தால் முஸ்லீம்களுக்கு மதவூக்க மிகுந்தது.

மதீனாவிலிருந்து தல யாத்திரை செய்து மக்காவில் நிகழும் ஆண்டுவிழாவிற்கு அநேகர் வந்திருந்தனர். நபியவர்கள் அன்னாருக்கு இஸ்லாத்தைப் போதித்தனர். அவர்களில் சிலர் வசப்பட்டார்கள். அவர்களுடன் முஸ் அபுவின் உமைர் இஸ்லாம் மதப்போதகராகச் சென்றனர். இவருடைய போதனையால் இஸ்லாம் விரைவாக எங்கும் பரவிற்று. முஸ்லீம்கள் பலர் அடுத்த ஆண்டு மக்கா விழாவிற்கு வந்தனர். அன்னாரிடம் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் நபியவர்களை நீங்கள் ஆதரிப்பீர்களானால் அவர்கள் உங்களுடைய நகரத்திற்கு வருவார்கள் என்றதும், அனைவரும் முகமலர்ச்சியுடன் அதற்குச் சம்மதித்தனர். உடனே முஸ்லீம்களில் நூறு குடும்பம் வரை மதீனாவில் குடியேறின. அதனால் மக்காவில் பல வீடுகள் மூடப்பட்டிருந்தன. நபிகளைப் பாதுகாக்க அன்ஸாரி குடும்பந் தலைப்பட்டது, பதின்மூன்றாமாண்டு நபி அவர்கள் யாதரப் எதாப் என்ற மதீனாவிற்குப் புறப்பட்டனர். அபூபக்கர் பின் தொடர்ந்தனர். இவ்வாறான நிகழ்ச்சிக்கு ஹிஜ்ரத் என்று பெயராயிற்று.

இருவரும் மக்காவுக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள 'தௌர்' எனும் மலைக்குகையில் மூன்று நாளிருந்தார்கள். பெருமான் வீட்டை முற்றுகை போட்ட கொடிய குறைஷிகள் அவ்வீட்டினுள் ஹஸ்ரத் அலிமட்டும் இருப்பதைக் கண்டு அவரிடம் நபி எங்கே என்று வினவ, நாயனுக்குத் தெரியுமென்று விடை பகர, கோபங்கொண்டு அன்னாரையும்

அபூபக்கரையும் பிடித்துக் கொடுப்பவருக்கு நூறு ஒட்டகங்கள் நன்கொடை கொடுப்பதாக விளம்பரஞ் செய்தனர். மேற்கூறிய குகையருகே சிலர் சென்றனர். குகை வாயிலைச் சிலந்திப்பூச்சி வலையைப்பின்னி அடைத்து விட்டதையும், பக்கத்தில் நின்ற மரக்கிளையில் புறாக்கள் கூடுகள் கட்டியிருந்ததையுங் கண்டோர் அதனுட்புகாமல் மீண்டனர்.

"முஹம்மதரிருக்குஞ் சார்பிற் சிலம்பிநூல் மறைப்பவோர்பால்
புகைநிறக் குன்றிச்செங்கண் புறவினங் குடம்பைசெய்திட்(டு)
அகடுறைக் கருவிட்டன்பா யணிமணிச் சிறையால்போர்த்துப்
புகரறச் சேவலோடும் பொருந்தியங் கிருந்ததன்றே"

இருவரும் நான்காம் நாள் குகையைவிட்டுப் புறப்பட்டுக் கடும்பகலில் நடந்துசெல்லக் களைப்புண்டாகி இடையில் ஆட்டுப்பாலருந்திப் பின் பிரயாணஞ் செய்யத் தொடங்கினர். வேவுகாரரிலொருவன் இருவருஞ்செல்வதைக் கண்டு அன்னார்பின் குதிரையை வேகமாய்ச் செலுத்தினன். பரி அயர்ந்து விழுந்தது, மூன்று முறை பரியேறிப் புறப்பட்டும் தடைமேல் தடை யேற்பட்டதால் வேவுகாரன் மனஞ்சஞ்லப்பட்டு நபியவர்களை அணுகி நிகழ்ந்ததைக் கூறினான். நபியவர்கள் அவன்மீது இரக்கமுற்று உனக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாதென்று கூறவே, அவன் ஊர்நோக்கித் திரும்பினான். நபியவர்களும் நண்பரும் பிரயாணப்பட்டு மூன்றாம் நாள் 'குபா' எனு மூரில் பதினான்கு நாள் தங்கி அங்கு பள்ளிவாசல் அமைக்க முயன்றார்கள். ஊராரனைவரும் ஊக்கமாக வேலை செய்தனர். அதன்பின் இருவரும் புறப்படவே அன்சாரிகளும் பின் தொடர்ந்தனர். நபிகளின் வரவை முன்னறிந்த மதீனத்தார்கள் எதிர்வந்து அழைத்தார்கள். அவ்வூரில் ஹஸரத் அபுஅய்யூப் எனும் ஏழையின் விருந்தாளியாக ஏழுமாதம் வதிந்தனர். அப்பொழுது மக்காவிற்கு ஆளனுப்பி நபிகள் தம்கண்மணியாகிய பாத்திமா வையும் ஆயிஷாப் பிராட்டியாரையும் வரவழைத்துக் கொண்டனர். குடியிருப்பதற்கு மண்செங்கலாலமைந்த சுவரின் மேல் பேரீச்ச ஓலைகளால் மேயப்பட்ட சாதாரணமான கட்டடம் அமைக்கப்பெற்றது. அன்றியும் அங்கு புதிதாகப் பள்ளிவாசல் ஒன்றும் அதன் பக்கத்தில் இரண்டு அறைகளும் கட்டப்பட்டன. இவற்றிற் கூடியமக்களுக்குத் தருமம்பற்றிய அருமையான பல உபதேசங்களைப் பெருமானவர்கள் செய்யவே யூதர்கள் கிறித்தவர்களுள்பட அவற்றைக் கேட்டு அநேகர் முஸ்லீம்களானார்கள்.

மதீனாநகரில் அன்சாரிகளுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி போராட்டமுண்டு. அவற்றில் இருகக்ஷிக்காரர்களிலும் பிரபலமானவர்கள்

பலர் மாண்டனர். பலர் வறுமையுற்றனர். அந்நகரின் பள்ளிவாசலில் 'பாங்கு' எனும் தொழுகை முறை துவங்கிற்று. 'அல்லா மிகப் பெரியவன். அல்லாவைத் தவிர வணக்கத்திற்குரிய வரெவருமில்லை.' இதனைக் கேட்ட மக்களனைவரும் பக்தியொழுக்கத்தோடு பள்ளிவாசலில் வந்து கூடுவது வழக்கமாயிற்று. அடைக்கலம் புகுந்த முஹாஜிரீன்களும், உதவி புரிந்த அன்சாரிகளும் சகோதரர்களாயினர். 'பதர்' யுத்தத்திற்குப்பின் அடைக்கலம் புகுந்தோரில் பலர் செல்வம் பெற்றனர். செல்வர்களானது வியாபார முயற்சியியினாலே என்பர். பெரும்பாலார் கூலிவேலை செய்து பிழைத்தனர். இவ்வாறு கிடைத்த பொருளில் ஒரு பகுதியை வீட்டுச் செலவு செய்து, மீதியைப் பொது நிதிக்கும் அளித்து வந்தனர். பெம்மானவர்களுக்குச் சகாவாயிருந்த ஏழைகளுக்குப் பெருமான் தமக்கு வருமுணவைப் பாகித்துக் கொடுப்பதுண்டு. பசிப்பிணியால் இரவு முழுவதும் விழித்து ஓதும் இவ்வறுமையாளர்களுக்குப் போதனை செய்யப் போதகர் நியமித்து அன்னாரைக்கொண்டு அயலூரில் பிரசங்கஞ் செய்ய அனுப்புவதுண்டு. மற்றவேளைகளில் இவர்கள் 'சுப்பா' (பள்ளிவாசல் வாரி நீட்டிவிட்ட விடம்)வில் வசிப்பார்கள்.

முஸ்லீம்களுக்குப் பகைவர்கள் இருவகையினர்: (1) முஸ்லீம் வேடதாரிகள், (2) யூதர்கள். இவர்களால் முஸ்லீம்களுக்கு இடைஞ்சல் நேரிடாதபடி நபியவர்கள் ஒருடன்படிக்கை செய்து வைத்தனர். அன்னிய நாட்டார் பிரவேசித்தால் இவ்விருவகையினரும் அன்னியனுக்கு இடங்கொடாமல் ஒறுத்தல்வேண்டும். இதற்கு அனைவரும் சம்மதமளித்தனர். இவ்விருவருகையாருக்குள் வித்தியாசமேற்படின் நபியவர்கள் நியாயமாக வழக்கை முடிவு செய்வார்கள்.

இதுவரை முஸ்லீம்கள் தொழும்பொழுது பைத்துல் முகத்திஸ் (எருசலேம்) நகரத்தை நோக்கித் தொழுது வந்தார்கள். இது முதல் கஅபாவை நோக்கித் தொழுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னோக்குமிடம் ''கிப்லா'' வெனப்பட்டது. பலரும் ஒன்றுசேர்ந்து தொழுதல் புண்ணியமாம் என்ற கோட்பாட்டின்படி பலரும் கூடிவாழ நேரிட்டது. தொழுகையை நடப்பிப்பவர் இமாமெனப்பட்டனர். முன்காலத்தில் கஅபா அமைக்கப்பெற்றதே ஒரு கடவுளை வணங்குவதற்காகவே. அதனை நாளடைவில் மக்கள் மறந்து சிலை வணக்கம், பல தெய்வவணக்கம் இவற்றைக் கைப்பற்றினர். இதனை யொழித்தலே நபியவர்களின் கருத்தாதலின் எதிரிகள் பலர் தோன்றினர், போர் புரிந்தனர், இடையூறு பலவிழைத்தனர் என்பதை முன்னமே

கூறப்பட்டது. குறைஷிகள் வைராக்கியம் குறையவில்லை. மதீனாவைத் தாக்கத் தானையைத் தயார் செய்தனர். இதையறிந்த பெருமான் முன் உடன்படிக்கைப்படி பலரும் ஒற்றுமைப்பட்டு அன்னியரைத் தாக்குமாறு தூண்டினர். முன்னூறுக்கு மேற்பட்ட முஸ்லீம்கள் ரம்லான்மீ 12வ பெருமானவர்களின் தலைமையின் கீழ் புறப்பட்டனர். இருககூஷியினரும் 'பதர்' (மதீனாவிலிருந்து 80 மைல் தூரத்திலுள்ளது) எனும் பள்ளத்தாக்கில் சந்தித்தனர். இரவில் பெம்மான் நித்திரை செய்யாமல் பகவானைத் தோத்தரித்தனர். குறைகூஷிகளில் சிலர் இரத்தஞ் சிந்துதலாகாது என்று ஒதுங்கினர். சிறுபடை பெரும்படையை வென்றது. இதுவே இஸ்லாமுக்குக் கிடைத்த முதல் வெற்றி. இச்சண்டையில் எதிரிகள் மாவு மூட்டைகளை விட்டோடியபோது அவற்றை முஸ்லீம்கள் கைப்பற்றினதால் இதற்கு 'சவீக்' என்ற பெயருண்டாயிற்று. மறுநாள் ஈதுல்பித்தர் எனுந் திருவிழாவில் 'ஸதகா' எனும் தருமஞ் செய்யும் வழக்கமும் தொடங்கப்பெற்றது. இத்தோல்வியால் சண்டை நின்றுவிடவில்லை. ஹிஜரி மூன்றாமாண்டில் 'உஹது' சண்டை நிகழ்ந்தது. இவ்விடம் மதீனாவிலிருந்து இரண்டாவது மைலிலுள்ளது. ஹஸரத் அப்பாஸ் அவர்கள் மூலமாகக் கிடைத்த இரகசிய எழுத்தால் நபியவர்கள் எதிரிகளை எதிர்க்கத் தயாராயிருந்தனர். ஆயினும் தாம் கண்ட கனவு விரோதமாக விருந்தமையால் பெரும்மானவர்கள் மனஞ் சிறிது கலங்கிற்று. தம்வசமிருந்த வீரர்கள் 700 பேர்களே. யுத்தக் குழப்பத்திலே முஸ்லீம்கள் முஸ்லீம்களைக் கொன்றனர். குழப்பத்திற்குக் காரணம் இந்த யுத்தத்தில் பெருமானவர்கள் இறந்து பட்டனரென்ற வதந்தி பரப்பப் பெற்றதேயாம். பெருமானவர்கள் காயப்பட்டிருந்தது உண்மை. தம் இரண்டு பற்களையும் இழந்தனரென்பதும் நிச்சயம். பாத்திமா சிகிச்சை செய்ததும் உறுதி. அபு சூபியான், இன்று தான் பதர்த் தோல்விக்குப் பதிலாக நாங்கள் பெற்றி பெற்றோம் என்று கர்வங்கொண்டனர். அவர் மனைவியார் ஹந்த் என்பவளும் ஹம்ஸாவின் வயிற்றைப்பிளந்து ஈரலை யெடுத்து வாயிலிட்டுச் சப்பினாளாம். நம் சண்டையில் ஆயிஷா நாயகியும் ஏனைய மாதர் பலரும் காயமடைந்தவர்களுக்கு வேண்டும் சிஸ்ருஷை செய்தார்கள். அபு சூபியான் சபதம்முற்றும் பலிக்கவில்லை. வெற்றி யார் பக்கமென்று உறுதியாகத் தெரியமுடியவில்லை. மதீனாவெங்கணும் அழுகைக்குரலே கேட்கப்பட்டது. இப்பெரு நஷ்டம் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டதால் குறைஷிகள் ஊக்கமடைந்தனர்.

ஆயினும், கலாபிக் முதலான சில கூட்டத்தார்கள் முஸ்லீம்களானார்கள். யூதர்களிலும் முக்கியமானவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஔஸ், கஜ்ரஜ் இருவகைக் கூட்டத்தாரும் முஸ்லீம்களாகி ஒற்றுமைப்பட்டு

வாழ்ந்தார்கள். அன்சாரிகளுக்கு யுத்தத்தில் கிடைத்த பொருளைக்கொண்டு யூதர்களிடமிருந்த ஏழை மக்களின் பணயங்கள் மீட்டப்பட்டன. முனாபிக்கீன்கள் சிலருடன் குறைஷிகள் கடிதப் போக்குவரத்துச் செய்தபோதிலும் முஸ்லீம்களைக் கசக்கிவிடப் பலவாறு முயன்றும் சித்திகிடைக்கவில்லை. அவர்கள் ஆயிஷாப் பிராட்டியார் மீது சுமத்திய பெரும் பழியும் ஆண்டவன் கிருபையால் இற்றொழிந்தது.

அபுசூபியான் விரோதம் பின்னும் தொலைந்தபாடில்லை. இருபத்து நாலாயிரம் யூதர்களும் இவனைத் தலைவனாகக் கொண்டு யுத்தத்திற்கு வந்தனர். மதீனாவிற்குப் பாதுகாப்பாயிருந்தது மலைகளும் குன்றுகளும் தோட்டங்களுமே, ஷாம் மாகாணத் திசைமட்டும் திறந்த வெளியாயிருந்தது. அதைப் பாதுகாத்தற்பொருட்டுப் பெருமானவர்கள் பத்துகெஜ சதுரமும் ஐந்துகெஜ ஆழமுமுள்ள அகழைத் தோண்டும்படி உத்தரவிட்டனர். தாமும் அம்முயற்சியில் ஈடுபட்டனர். இப்பொழுதுதான் பாரசீகத்தின் திறவுகோல் கிடைத்ததென்று மகிழ்ந்தனர். ஜிப்ரீல் அதனை உறுதிசெய்ய, சிறுபடையினர் ஊக்கம் பெற்றனர். அகழ்ச்சண்டையில் அபுசூபியான் முதலான ஐந்து தளகர்த்தர்கள் சேனையை நடத்தியும் அவர்கள் அகழைக் கடக்க முடியவில்லை. இச்சண்டையில் இறந்த முஸ்லீம்கள் சிலரே.

முகா ஜரீன்கள் மதீனாவிற்கு வந்து ஐந்தாண்டுவரை மக்காவைப் பாராத காரணத்தால் பார்க்கவேண்டுமென்ற அவா மிகுந்திருந்தது. இவர்களின் பெண்டிர்பிள்ளைகள் அங்கே குடியிருந்து வந்தனர். கபாஅவிற்கு யாத்திரிகர்கள் வரும் நான்கு மாதங்களில் சண்டை சச்சரவுகளை நிறுத்தி வைப்பது வழக்கம். கஅபாவைக் கண்டு தரிசித்ததாகப் பெருமானவர்களும் கனவு கண்டார்கள். கலகமொன்றும் நேரிடாதிருக்குமாறு ஹுதைபியா உடன்படிக்கை செய்யப்பட்டது. "அடுத்த வருஷத்தில் முஸ்லீம்கள் மக்காவில் மூன்றே நாள் தங்கலாம். உறையிலிட்ட வாள் மட்டும் தாங்கி வரலாம். மக்காவிலுள்ள முஸ்லீம்களே கூட்டிக்கொண்டு போகலாகாது. மக்காவில் குடியிருக்க விரும்பும் முஸ்லீம்களைத் தடுக்கக்கூடாது". இதன்பின் பெருமானவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வருகையில் ஆண்டவனருளால் 'நாம் உமக்கு வெளிப்படையாக வெற்றி தந்தோம்' எனும் அசரீரி பிறந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அபிசீனியாவிலிருந்த முஸ்லீம்கள் தங்கள் தங்களூருக்கும் மதீனாவிற்கும் பயமில்லாமல் திரும்பி வந்தனர்.

இதற்குமுன் மதீனாவிலிருந்து வெளியேறிய யூதர்கள் இருநூறுமைல் தூரத்தில் கோட்டைகளைக் கட்டிச் செழித்திருந்த தேசம் **கைபர்** என்பது. ஹிஜிரி ஆறாமாண்டில் ஈண்டுள்ள யூதர்களுடன் கத்பான் கூட்டத்தாரும் சேர்ந்து யுத்தபாணிகளாயினர். மதீனாவைத் தாக்குவதே அவர்கள் கருத்து.

பெருமானவர்களின் ஒட்டகங்களில் இருபதைக் கன்னெஞ்சம் படைத்த யூதர்கள் கைப்பற்றினார்கள். அவற்றை மேய்த்துக்கொண்டிருந்த அபூதரையும் வெட்டிவிட்டார்கள். இச்செய்தி எட்டியதும் பெருமானவர்கள் ''ஆண்டவனுக்காகப் போர் புரிய ஆசையுடையவர்கள் நம்முடன் வாருங்கள்'' என்று விளம்பரஞ் செய்தார்கள். ஆயிரத்து நானூறு காலாட் படையும் இருநூறு குதிரைப்படையும் தயாராயின. பெருமானவர்களுடன் பிராட்டியார் ஹஸரத் உம்மு ஸல்மாவும் யுத்தகளத்திற்குப் புறப்பட்டனர். முஸ்லிம் படையினர் மூன்று கொடிகளைப் பிடித்துக் கொண்டு தக்பீர் சொல்லி ஆகுலஞ் செய்து கைபரை நோக்கிப் புறப்பட்டனர். அந்நகரிலிருந்த ஆறு கோட்டைகளில் இருபதாயிரம் போர் வீரர்களிருந்தனர். 'மர்ஹப்' எனுந் தலைவன் தலையை ஹஸ்ரத் அலி அவர்கள் வாளால் துணித்தனர். இருபது நாள் யுத்தம் நடந்தது. யூதர்கள் தோல்வியடைந்தனர். முஸ்லீம்கள் கைபரைக் கைப்பற்ற ஆரம்பித்ததும், யூதர்கள் ஆண்டுதோறும் அந்நாட்டின் விளைவு பொருள்களிற் பாதியைக் கப்பமாகக் கொடுக்கச் சம்மதித்தவுடன் பெருமானவர்கள் அதற்கு இணங்கினர். திக்கற்றிருந்த பெருஞ் செல்வியாகிய யூதஸ்திரி ஸபியா என்பாள் சிறைப்பட்டவுடன் அந்த அம்மையாரை அடிமைப்படுத்தாமல் யூதர்களுடைய விரோதத்தைத் தணிக்கும்பொருட்டுத் தம்மனைவியாக்கிக் கொண்டனர். இதற்கு முன் நடந்த யுத்தங்களில் முஸ்லீம்கள் தங்களைக்காத்துக் கொள்ளவே யுத்தஞ் செய்தார்கள். இந்த கைபர் போர்தான் முஸ்லீம்கள் வாகை சூடற் பொருட்டுத் தொடுத்த போர்களில் முதலாவதாகும். கைபர் நாட்டில் பாதி பொது நிதிக்கும், பாதி யுத்த வீரர்களுக்கும் அளிக்கப்பட்டன. இப்போரின் பயன் யூதர்களின் பகை யொழிந்தது. குர் ஆன் தடையன்னியிற் போதிக்கப்பட்டது. மற்றிடங்களிலுள்ள யூதர்களும் கலகஞ் செய்வதை நிறுத்திவிட்டனர். மக்காவுக்கு முஸ்லீம்கள் வருவதைப் பார்த்துப் பொறுக்கமாட்டாத குறைஷிகள் அவர்கள் அவண் தங்கும் மூன்று நாள் வரை நகரத்தை விட்டு வெளியூர்களிலிருந்தனர் இது நிற்க.

அடுத்த போர் ஷாம் தேசத்தில் 'மூத்தா' எனும் பதியிலிருந்து அரசாண்ட கிறிஸ்தவ மன்னனாகிய ஷர்ஜிலுடன் நிகழ்ந்தது. அதற்குக் காரணம் முஸ்லீம் தூதரொருவரைக்கொன்றதேயாம். பழிவாங்குவதற்காக மூவாயிரம் வீரர்களைப் பெருமானவர்கள் அனுப்பினார்கள். எதிரிகளின் தானையோ எண்ணிக்கையற்றிருந்தது. இரண்டு படைகளும் ஈட்டி வாள்களைப் பிரயோகித்தன. காலித் அவர்களின் வீரத்தால் முஸ்லீம்கள் வெற்றி பெற்றனர். பெருமானவர்கள் இந்நற்செய்தியைத் தீர்க்கதரிசனத்தால் அறிந்து வெளியிட்டார்கள். பின்னர் சில கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தைத்

தழுவினார்கள். ஷர்ஜீல் பலவாறு முயன்றும் இஸ்லாம் பரவி வருவதைத் தடுக்க முடியவில்லை.

இஸ்லாத்தின் பலத்தைக் குறைப்பதிலே கண்ணுங் கருத்துமாயிருந்த குறைஷிகள், ஹுதைபியா உடன்படிக்கை சரத்துக்களை மீறி, முஸ்லீம்களுடன் சேர்ந்த குஸாஅக் கூட்டத்தாரைத் தாக்கும்படி, பனுபக்கர் கூட்டத்தாரைத் தூண்டிவிடவே, கோரமான யுத்தத்தைத் தாங்கமாட்டாத குஸாஅக் கூட்டம் கஅபாவில் புகுந்தனர். எதிரிகள் அந்தப் பரிசுத்தமான தலத்தில் புகுந்து அநேகரைக் கொன்றனர். இந்த விவரந் தெரிந்ததும், பெருமானவர்கள் குறைஷிகளிடம் ஒரு தூதரையனுப்பி, இப்பரிசுத்தக் கேட்டிற்குக் காரணமும் ஈடும் அறிந்து வரச்சொன்னார்கள். குறைஷிகள் சரியான பதிலளிக்கவில்லை, வீரமே பேசினார்கள், உடன்படிக்கையை மீறினார்கள். இதனைத் தெரிந்தபின் பெருமானவர்கள் மக்காவிற்குச் சேனையோடு செல்ல எத்தனித்தனர். பத்தாயிரம் பேர்களுடன் பெருமானவர்கள் மக்காவுக்குப் புறப்பட்டனர். கடும்பகைவனான அபுசூபியான், முஸ்லீம்கள் இடைவழியில் தங்கியிருந்த இடத்திற்கு இரவில் வந்து பார்த்ததும் திகிலடைந்தான். ஹஸரத் அப்பாஸ் என்பவர் அவனைக் கண்டு பேசினர். பெருமானுடைய மன்னிப்பைப் பெற்றுத் தருவதாக வாக்களித்தனர். அபுசூபியான் அதற்கிசைந்து சொல்லவும், இருவரும் பெம்மானவர்களிடஞ் சென்றார்கள். அபுசூபியான் நபி நாயகத்துடன் பேசியதும் அவன் முஸ்லீமாயினன். இதனைக் கண்ணுற்ற முஸ்லீம்கள் ஆனந்த பரவசராயினர். அபுசூபியான் குறைஷிகளிடஞ் சென்று, 'விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டு நாயனை நம்புங்கள். நாம் நற்கதி அடையலாம்,' என்று கூறினான். அபுசூபியானுடைய மனைவி அதைக் கேட்டதும் தீராக்கோபமுற்று அவனை அவமானமாகப் பேசித் துன்புறுத்தினள். முஸ்லீம் படை மக்காவுக்கருகில் வர, எதிரிகள் எவருங் காணப்படவில்லை. முஸ்லீம் படை நான்கு திக்குகளின் வழியாக மக்காவுக்குள் பிரவேசித்தது. அத்தருணத்தில் குறைஷிகளின் சிறுபடையொன்று முஸ்லீம்களின் மீது அம்பு எய்தது. காலித் அப்படையைப் புடைத்தோட்டினர். பூசல் ஓய்ந்தது. போர் முடிந்தது. பெருமான் கஅபாவை எழு முறை வலம் வந்து அங்கு உள்ளிருந்த சிலைகள் முந்நூற்று அறுபதையும் தம் கையாற்றள்ளி வெளியேற்றினர். கஅபாவும் தூய்மை அடைந்தது. பாங்கு கூறப்பட்டது. தொழுகை நிகழ்ந்தது. கஅபாவின் திறவுகோல் உத்மான் இப்னு தல்ஹாவிடம் கொடுக்கப்பட்டது. அப்படியே அச்சாவி அவர் சந்ததியிடமிருந்து வந்தது. பெருமானவர்களின் பெருந்தன்மையை அறிந்த உத்மான் உடனே முஸ்லீமாயினர். பெருமான் இஸ்லாத்தின் மகிமையைப்

பற்றிக் குத்பா (பிரசங்கம்) செய்தனர். 'நாயன் உங்களை மன்னிப்பாராக' என்று அவர் கூறியதும், 'இவரினும் சிறந்தவர் எவருமில்லை' என்று கேட்டோரனைவரும் சொன்னதுமன்றித் தாங்களே வந்து முஸ்லீமாயினர். பதினைந்து நாள் மக்காவிலிருந்து விட்டு பெம்மான் மதீனாவிற்குச் சென்றனர். மக்காவின் வெற்றி மகானின் வெற்றியாயிற்று.

ஹிஜ்ரி எட்டமாண்டில் ஹுனைனில் சண்டை உண்டாயிற்று. இப்பள்ளத்தாக்கிலிருந்த கூட்டத்தாருக்கு மக்காவின் வெற்றி வருத்தத்தைக் கொடுத்தது. அக்கூட்டத்தார் வில் வீரர்கள். அவருடைய அம்புகளைத் தாங்கமாட்டாமல் முஸ்லீமுடைய பெருஞ்சேனை சிதறியது. பெருமானும் அப்பாஸும் நிலை பெயராமல் நின்றனர். பின்னர், சிதறிய சேனை திரும்பவுங் கூடிற்று. ஆவேசத்திலாழ்ந்தது. வீரப்போர் நிகழ்ந்தது. எதிரிகளில் ஆறாயிரவர் அடிமைப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான ஒட்டகங்களும், ஆடுகளும், ஔக்கியா (வெள்ளிக்காசும்) முஸ்லீம்களின் கைவசமாயின. பிடிபட்டவர்களில் பெருமானவர்களின் செவிலித்தாயின் மகள் ஒன்று என்றறிந்து, அம்மாதை வருவித்து மரியாதை செய்து ஒட்டகங்களையும் ஆடுகளையும் கொடுத்து காவலாளருடன் ஊருக்கனுப்பினார்கள். ஆறாயிரம் கைதிகள் விடுதலையடைந்தனர். இவ்வாண்டில் பெருமானவர்களின் வாழ்க்கைத் துணையாயிருந்த மாரியாகப்தியாவிற்கு இபுராகிம் என்றழைக்கப்பெற்ற மகன் உதயமானான். ஓராண்டு அக்குழந்தை உயிருடனிருந்தது. நபியவர்களின் மகள் ஸைனப் ரலியும் இவ்வாண்டினில் பரலோகஞ் சென்றனள்.

கிறிஸ்தவர்கள் தொல்லையும் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டிருந்தது. தபூக் நகரம் ஷாம் மாகாணத்தின் எல்லையிலுள்ளது. முஸ்லீம் பெருஞ்சேனை வருவதைக் கண்ட கிறிஸ்தவ வீரர்கள் மருண்டு போயினர். இருபது நாள் வரை எதிரி வருவதை நோக்கிக் கொண்டேயிருந்த நபிகள் ஏமாற்றமடைந்தனர். அனேக கூட்டத்தார் பெருமானவர்களிடம் பாதுகாப்பு வரி கொடுப்பதாகச் சொல்லி உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்பின் பெம்மான் மதீனாவிற்குத் திரும்பிவர நகரவாசிகள் முதியர், இளைஞர், ஆண், பெண் பகுதியாரனைவரும் கூடி நல்வரவு கூறினர்.

ஹிஜிரி ஒன்பதாமாண்டில் மக்காவுக்குத் தலயாத்திரை போன முஸ்லீம்களுக்கு நற்போதனை செய்யுமாறு சில பெரியாரைப் பெருமானவர்கள் அனுப்பினர். அப்பொழுது கஅபாவில் பழைய அநாகரிக கிரியைகள், சடங்குகள் நிகழ்வதைப் பார்த்தார்கள். அநாகரிகத்தை நீக்குமாறு பெருமானவர்கள் முயன்றனர். அந்த ஆண்டு தலயாத்திரைக்கு 'ஹைஜ்ஜுல் அக்பர்' என்ற பெயருண்டாயிற்று. அபுபக்கரும், ஹஸரத் அலி அவர்களும் குர்ஆனிலிருந்து பல ஆயத்துகளை ஓதினார்கள். பின் ''முஸ்லீம்களைத்

தவிர ஏனையர் கஅபாவினுட் பிரவேசிக்கலாகாது என்றும், ஆடையணியாமல் எவரும் கஅபாவைச் சுற்றிவரலாகாது என்றும், முஸ்லீம்களுக்கு விரோதிகளாயிருப்பவர்களும் அங்ஙனம் வரலாகாது என்றும் முஸ்லீம்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நான்கு மாத அவதி கொடுக்கப்படுமென்ற அறிக்கையொன்று வெளியிடப்பட்டதும், அனைவரும் முஸ்லீம்களாய் விட்டனர். அதன்பின் ஸக்காத்து (தருமவரி) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் பெருமானவர்களிடம் தூதுகள் பல வந்தன. பனூதமீம், பனூஸஅத், தக்கீப், நஜ்ரான் (எமனின் பக்கத்திலுள்ள சிறு மாகாணம்), கீஸ் ஐவான், தை, மஸைனா, ஆகிய விடங்களிலிருந்து நானாவிதக் கூட்டங்கள் இஸ்லாத்தைத் தழுவின.

முஸ்லீம் வேடதாரிகள் இஸ்லாம் மீது உட்பகையுற்று உழையிருந்து தீங்கு இழைத்து வந்தனர். இவர்களுக்கு முனாபீகின்கள் என்று பெயர் வழங்கியது. விரோதிகளிடம் உறவு கொண்டாடி இஸ்லாத்திற்கு இடைஞ்சல் செய்தலே தங்கள் கருமமன்று இவ்வஞ்சகர்கள் நினைத்து ஒழுகி வந்தனர். அன்னாரில் உபையின் குழாமுமொன்று. இவ்வஞ்சகன் கொடிய நோயுற்று மறைந்தான். அவனுடைய தீச்செயல்களை மன்னித்து அவனுக்கு மரண பிரார்த்தனையும் பிரானவர்கள் செய்தனர். மதீனா நகர முழுவதும் இஸ்லாமியமாயிற்று. பெருமானவர்கள் அவதாரமெடுத்ததன் பயன் கைகூடிற்று.

ஹிஜிரி பத்தாம் ஆண்டில் துல்கஅதா மாதம் 26வ பெருமானவர்கள் மக்காவுக்கு யாத்திரை செய்தார்கள். பிராட்டிகளனைவரும் அம்மகானுடன் ஆங்கு ஏகினர். துல்ஹலீபா, ஸர்ப் எனுமிடங்களிற்றங்கி ஸ்நானஞ் செய்து ஜெபதபம் முடித்ததும், ஓதி உபதேசித்தும், ஒன்பதாம் நாள் ஞாயிறன்று மக்காவில் அனைவரும் வந்து சேர்ந்தார்கள். கஅபாவைத் தரிசித்தார்கள். அதன் பின் மர்வா என்ற குன்றின் மீதேறிப் பல கிரியைகள் செய்து முடித்ததும், அரபாத்தில் குழாம் தங்கிற்று. ஆண்டு லக்ஷ்க்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். அன்னாருக்காகப் பெம்மான் வெகு அருமையான ஒரு பிரசங்கஞ் செய்தனர். மதீனாவிற்குத் திரும்பிவரும் மார்க்கத்தில் கதீர்கம் என்னுமிடத்தில் தம் தோழர்களுக்குக் கேட்டாரைப் பிணிக்கத்தக்க அழகான உபதேசஞ் செய்தனர்.

மதீனாவிற்கு வந்த பின் பெருமான் தாம் பிரியுங்காலம் வந்துற்றதென்று தெரிந்து ஆண்டவனைத் தொழுதலிலே தம் காலத்தைச் செலவு செய்து வந்தனர். ஹிஜிரி 11ல் ஸபர் மாதமத்தியில் ஒரு நள்ளிரவில் மதீனாவில் பெரியார்க ளடக்கஞ் செய்யப்பட்டிருந்த ஜன்னத்துல் பக்கீஉக்குச் சென்று மனமார்ந்த பிரார்த்தனை யொன்று செய்தார்கள். அதன் பின்

பெருமானவர்களுக்குக் காய்ச்சல் கண்டு பலவீனப்பட்டிருந்த காலத்தில் ஒரு நாள் குளித்துவிட்டுப் பள்ளிவாசலுக்குப் புறப்படும் தருணத்தில் மயக்கமுண்டானதால், அன்று பெருமானவர்களின் ஆணைப்படி அபூபக்கரவர்களே தொழுகையை நடத்தினார்கள். நண்பர்கட்கும் பகைவர்கட்கும் நற்கதி கிடைக்கும் வண்ணம் கடைசியான பிரார்த்தனையைப் பெருமானவர்கள் செய்து முடித்தனர். பின்னர் அவர் மகள் பாத்திமாவை அழைத்து, 'நான் இனி இறந்து விடுவேன் நீயே என்னிடம் முதலில் வந்து சேருவாய்' என்று சொற்றனர். ரபீயுல் அவ்வல் 12வ திங்களன்று பிற்பகலில் பெருமான் ஆண்டவன் அடி சேர்ந்தனர். அப்பொழுது பெருமானவர்களுக்கு வயது அறுபத்து மூன்றே. ஆண்டவன் அருள்க.

மக்காவிலா, மதீனாவிலா, வேறு இடத்திலா அடக்கஞ் செய்வது என்ற வாதம் நிகழவே, பெருமான் தாம் மரணமாயின இடத்தில் தம்மை அடக்கஞ் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருப்பதாக அபூபக்கர் தெரிவித்தனர். அங்ஙனமே ஆயிஷிப் பிராட்டியார் இல்லத்தில் நபிகள் மரணமாகும்போது படுத்திருந்த படுக்கையினடியில் குழி தோண்டப்பெற்று ஆங்கே அடக்கஞ் செய்யப்பெற்றது. அம்மையார் அகம் பள்ளிவாசலுக்கு அடுத்திருந்தது. ஹுத் ஜீராவில் நபியவர்களின் நண்பர் அபூபக்கர், உமர் இவர்களும் அடக்கஞ் செய்யப்பட்டுளர். தலயாத்திரிகள் அந்த இடத்தைப் பார்த்து வணங்காமற் போவதில்லை. வாகாபியர் மதீனாவைப் பிடித்துக் கொள்ளையடித்த காலத்தில் பக்திமான்களுடைய பிரார்த்தனைகள் நிறைவேறியதன் ஞாபகமாக அளித்த விலையுயர்ந்த காணிக்கைப் பொருள்கள் அந்த இடத்தில் புதையல்களாக இருப்பதைக் கேள்வியுற்று அதனைக் கொள்ளை கொண்டார்கள். ஆயினும் அவ்விடம் செம்மைப்படுத்தப்பட்டு ஷேக் அல்ஹாமுடைய மேற்பார்வையில் வைக்கப்பெற்றது.

முகம்மது நபி அவர்கள் இயற்கை அறிவு மிகுந்துள்ளவர். ஞாபக சக்தி மிகுந்தவர். படியாதவரெனினும் செவிச் செல்வம் நிறைந்தவர். இங்கிதமாகப் பேசும் வல்லமை பெற்றவர், பிள்ளைகளிடங் கொஞ்சுபவர், மிதமாகவுண்பவர், விரதங்கள் நோன்புகள் காப்பவர், எளிய கிழிந்த உடையுந்தரிப்பவர், அணி ஆபரணங்களை நயவாதவர், உயர்ந்த பதவியிலிருந்தபொழுதும் பாட்டாளிகளுடன் கடுத்தமாக வேலை செய்பவர். மேல் கீழ் என்றில்லாமல் யாவருடனும் சமத்துவமுஞ் சகோதரத்துவமும் பாராட்டியவர். எப்பொழுதும் குளித்துச் சுத்தமாயிருப்பவர். பெண்மையும் சுகந்தமும் நாடுபவர், நடுவு நிலைமை தவறாதவர். காட்சிக் கெளியவர், கடுஞ் சொல்லரல்லர். ஈவுமிரக்கமுங் குடிகொண்டவர். இயற்கையில் முற்கோபியாயினும், அடக்க முடையவர். அத்தகையரென்பதற்கு அவருடைய ஏவலாளி ஆனால் கூற்றே

தக்க சான்றாகும். 'எனக்கு எட்டுவயது முதல் நான் அவருக்குப் பணிவிடை செய்தேன். என்னால் எத்தனையோ சாமான்கள் கெட்டுப்போயின. அப்படியிருந்தும் எப்பொழுதாயினும் எதற்காயினும் அவர் என்னைத் திட்டியதேயில்லை. பெருமானவர்கள் சிறுவயதிலிருந்தே ஏகமாயிருந்து தியானஞ் செய்து வந்த பழக்கத்தாலும், வெவ்வேறு மக்களுடன் பழகிக் குற்றங் குறையில்லாத மனிதவர்க்கமே கிடையாதென்று தெரிந்தமையாலும், 'ஆங்கமல நீர்போல' எவருடனும் வேற்றுமைப்படாது ஒத்து வாழ்ந்தனர். இவருடைய குணாதிசயங்களால் அரேபியா தேசம் ஒற்றுமைப்பட்டு முன்னேற்றமடைந்ததென்னும் முஸ்லீம் உலகம்.

சுருங்கக்கூறின், மனத்தூய்மை, இன்னா செய்யாமை, மரியாதை, அன்பு, சுத்தமான வாக்கு, பெரியாரிடம் வணக்கம், தாழ்ந்தாரிடம் பொறுமை, ஏழைகளிடம் அன்பு, இவை நபிகளிடம் மிளிர்ந்தன. முதலில் மதோபதேசகராயிருந்து, பின் தேச அதிகாரியாகி, உறுதி தவறாத நண்பராகவும், தர்மந்தவறாத சத்துருவாகவும்,கருணை தவறாத எதிரியாகவும், நியாந்தவறாத அரசராகவும், பக்தி தவறாத அடிகளாகவும், இயன்றவரை உபகாரியாகவும், கடவுள் தூதராகவும் இருந்து கடவுளுபதேசத்தைப் பரப்பி அனைவரையும் கருணைக்கு ஆள்களாக்கினர்.

''ஞானவாரிதியை நபிகளுக்கரசை நானில மேற்சுவடுறாத
வானமாமணியை இருநிதித்தருவை மரபுகட்கொருதனிச் சுடரை
மோனமாதவர்கள் தொழுநவமணியை மூவுலகனைத்தும் ஒருலகில்
கோனியல்புரிய வருமுகம்மதுவைக் குணமுடன் என்றுகாண் குவனே.''

முடிவாக

திருகுர்ஆனில் 109-வது அத்தியாயமான காஃபிரூனில் (நிராகரிப் போர்) ஆறாவது வசனம்.லக்கும், தீனுக்கும் வலியதீன், அதாவது உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு, என்னுடைய மார்க்கம் எனக்கு? திருமறையின் வழியிலேயே திருநபி (ஸல்) தனது வாழ்நாளில் பிறமதத்தினர்களைப் போற்றியும், மதித்தும் நடந்தார்கள்.

கிறிஸ்தவர்களுடன் ஒப்பந்தம்

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு முஹர்ரம் மாதம் மூன்றாம் நாள் மதீனாவிலுள்ள பள்ளி வாசலில் வைத்து ஹலரத் அலி (ரலி) அவர்கள் எழுதிட அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முத்திரையிடப்பட, பதினாறு சஹாபாக்கள் (தோழர்கள்) சாட்சிக் கையெழுத்திட்ட சாஸனம் அண்ணலாரின் சமயப்பொறையினை அகிலத்திற்கு எடுத்துக்காட்டுகிறது.

தூய காதரீன் மடத்தின் கிறிஸ்தவ சன்னியாசிகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த அந்த உரிமைப் பத்திரத்தினை (A Description of the East and other countries by Richard Pococke, Bishop of Meath) கிறிஸ்தவ பிஷப் ரிச்சர்டு, போக் எழுதி கி.பி. 1743-இல் வெளியிட்ட 'கீழ் நாட்டினுடையவும் இதர தேசங்களினுடையவும் விபரம் என்ற நூலிலும், ஜான்டெவன் போர்ட் எழுதிய (John Davenpurt) Apology for Mohamed எனும் நூலிலும், அல் அஸ்ஹர் பல்கலைக்கழக ஆசிரியர் அல்லா மாகிலர் எழுதிய 'மஹாலிரத்துல் இஸ்லாம்' என்னும் நூலிலும், செய்யத் அமீர் அலி எழுதிய, 'Sprit of Islam' என்ற நூலிலும் இன்றும் காணலாம்.★ சமயப் பொறையாளரான, பிற மதத்தினரை மதித்துப் போற்றும் அண்ணலார் (ஸல்) அவர்களின் இயற்பெயர் (இஸ்மு) முஹம்மத் (புகழப்படுபவர்) ஆகும். அவர்களது புனைப்பெயர் (லகப்) மாஹீ (இறை மறுப்பை அழிப்பவர்) அஹ்மத் (இறைவனை அதிகமாகப் புகழ்பவர்) ஹாஷிர் (மக்களை ஒன்று திரட்டுபவர்) என்று அழைக்கப்பட்டது. அவர்களது குறிப்புப்பெயர் (குன்யத்) அபுல் காஸிம் (அபு அல்லது உம்மு எனத் துவங்குவது குறிப்புப் பெயராகும்) அண்ணலார் (ஸல்) அவர்களின் மூத்த புதல்வர் காஸிம். சிறுவயதிலேயே இறந்து விட்டார். எனவே அபுல் காஸிம் (காஸிமின் தந்தை) என நபியவர்கள் அழைக்கப்பட்டார்கள்.★★

வாழ்வில் விட்டுச் சென்றவை

மனித வாழ்வை, மிகவும் எளிமையோடு நடத்தி நேர் வழிநின்ற நாயகம் (ஸல்) தனது தூயவாழ்வின் முடிவில் ஒரு சீப்பு, சுருமாக் கூடு, இரண்டு தொழுகைப்பாய், திரிகை, ஒரு சோடி செருப்பு, போர்வை, தஸ்பீஹ், ஊன்றுகோல், கேத்தல், கீழ் ஆடை, குர்ஆனில் சில தொகுப்புகள், பல் துலக்கும் குச்சி, ஜீப்பா, மூன்று பாய்கள், இரண்டு சுர்மாக்கோல் ஆகியவைகளுடன்★★★ தனது நேரான வாழ்க்கை முறையையும், போதனைகளையும், திருகுர்ஆனையும் விட்டு மறைந்தார்கள்.

அதனால் தான் பல நூற்றாண்டுகளாக, சாதி, மத, இன, மொழி, நாடு, கண்ட வேறுபாடின்றி அண்ணல் (ஸல்) அவர்கள் அனைவராலும் இன்றளவும் போற்றப்பட்டும், இனி எதிர்காலத்திலும் போற்றிடப்படவும் இருக்கிறார்கள்!(தாய்தமிழகத்தில் தாஹாநபி (ஸல்) பற்றி, தமிழ் நெஞ்சங்கள் உரைத்த, எழுதிய விவரங்கள் அனைத்தையும் முழு நூலாக வெளியிட போதிய வசதியையும், வாய்ப்பையும் அல்லாஹ் அருள்வானாக)

★ K.T.M. அஹ்மது இபுறாஹீம், நபி பெருமானவர்களும், பிற மதத்தினரும் திருநெல்வேலி 1945, பக் 16,17.

★★ ஸஹீஹுல் புகாரி, நபிகளாரின் பொன்மொழிகள், நான்காம் பாகம், சென்னை 1998, பக் 207.

★★★ அப்துற்றஹீம் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதி 3, சென்னை, 1979, பக் 729.

நூலாசிரியர் - வரலாற்றாசிரியர்

செ.திவான் M.A., M.Phil., எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்காசிப் (உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ. 5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல... (சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5. நபிபெருமானாரின் நாற்பது பொன்மொழிகள்
6. தக்கலை பீர்முகம்மது(ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9. குடை
10. சிந்தனைக்கு
11. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12. வ.உ.சி.யும் பெரியாரும்
13. வ.உ.சி.யும் தொல்காப்பியமும்
14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!
20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு
22. குடைப்புரட்சி
23. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
24. வாகை சூடி வரும் வைகோ
25. கலைஞரை வென்ற வைகோ
26. வைகோவின் பொன்மொழிகள்
27. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28. வ.உ.சி.புகழ் பாடிய முன்னோடிகள்
29. வ.உ.சி.யின் நூற்கோவை
30. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்
31. ஆன்மிகச் சிந்தனை
32. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
33. செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34. கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35. வி.ஒ.சி. கண்ட பாரதி
36. இறைநேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38. இறைவனின் திருநாமங்கள்
39. இறுதித்திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)

விற்பனையில்...கீழ்க்கண்ட இரு நூல்கள் மட்டும்

41. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் (ஆய்வுநூல்) விலை ரூ.120
42. ஆரியப் பாதையில் பசுவதை.. (அரிய ஆய்வு நூல்) விலை ரூ.100

தேவைக்கு சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை என்ற முகவரிக்கு M.O. செய்க.

43. பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி (அச்சில்)
44. அண்ணாவின் மறுபக்கம் (அச்சில்)
45. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்(அச்சில்)

இனிப்புக்களில் ராஜா

RAJA
SWEETS

ராஜா
ஸ்வீட்ஸ்

ராஜா குருப்ஸ் நிறுவன அதிபர் அண்ணன்

ஜனாப். **P. சுல்தான்** Ex.M.C. அவர்களின்

சார்பு நிறுவனங்கள்

ராஜா கட்பீஸ் சென்டர் : ராஜா கட்பீஸ் ஸ்டோர்ஸ்

ராஜா ரெடிமேட்ஸ் : ராஜா பேக்கரி (பாளை)

ராஜா கட்பீஸ் மேட்சிங் சென்டர் (டவுண்)

திருநெல்வேலி. ✆ 331712, 331713